குறள் நெறி

தமிழ்வாழ்க

(கட்சிச் சார்பற்ற, அரசியல், இலக்கியப் பண்பாட்டு வெளியீடு)

திங்களிருமுறை வெளிவருவது | தனி இதழ் காசு 25 | ஆண்டுக் கட்டணம் ரூ 5-00

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 மாசித்திங்கள் 3ஆம் நாள், (15-2-1964) | இதழ் 3

திருக்குறளைப்போலச் சிறந்ததொரு நூலில்லை.

6—2—64 ஆம் நாள், மதுரை. தியாகராசர் கல்லூரி, இளங்கோ மன்றத்தில் நடந்த திருவள்ளுவர் விழாவின்போது திரு. கரு. முத்து. தி. சுந்தரனார், B. Com அவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

பேரவையீர் !

வணக்கம்.

நம் கடமை

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

நம்நாடாகும். தெய்வமணம் கமழும் திருக்குறள் நெறியைப் பாரெங்கும் சென்று பரப்பவேண்டியது நம் தமிழர் கடமையாகும்

மகளிர் மாண்பு

திருவள்ளுவரின் முப்பாலைப் பற்றி இங்கே இருபாலார் பேசுவது மகிழ்ச்சிக்குரியதாகும். அதிலும், மகளிர் அறத்துப்பாலைப்பற்றி உரை நிகழ்த்துவது மிகவும் பொருத்தம் உடையதாகும். மக்களைப் பெற்று அன்புடன் பேணி வளர்த்து இல்லறத்தை நல்லறமாக நடத்துதற்கு ஏற்ற பண்புகள் பெற்று விளங்குபவர் மகளிரே யாவர் அன்றே!

துணிவு வேண்டும்

பிறமதத்தவர் தம் மதங்களின் உயர்வுகளை எடுத்துக்கூறுகின்ற அளவுக்குச் சைவசமயத்தார் தம்மதத்தின் உயரிய உண்மைகளை எடுத்துக் கூறுகின்றாரில்லை. அதைப் போன்றே வள்ளுவரின் உயரிய நெறிகளை விரிவாகவும் துணிவாகவும் கூறுகின்ற அறிஞர்கள் சிலராகவே உள்ளனர். இந்நிலை மாறுதல் வேண்டும்.

திருக்குறளும் வீடுபேறும்

திருக்குறள் அறம், பொருள், இன்பங்களை அமைப்புறக் கூறி வீடு பேற்றை விளக்கி வீடுபெற நிற்கும் விழுமிய நூல் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

செம்மை மனம் பரப்பி நிற்கும் சிறப்புமிகு திருக்குறளைச் சிலர் தீக்குறளே எனக்கூறியது கேட்டு மனம் மிக வருந்தினேன்

வள்ளுவரும் புத்தரும்

''ஆசையே துன்பத்திற்குக் காரணம், ஆகவே ஆசையை நீக்குமின்', என்பது புத்தர் பெருமான் திருவாக்கு. இக்கருத்தைத் திருவள்ளுவர்

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்'

'வேண்டற்பால அன்ன விழுச்செல்வம் ஆண்டும் அஃதொப்ப தில்'

எனக் கூறியுள்ளார்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'

என்ற திருக்குறளும் இங்கே நினைவு கூறத்தக்கதாகும்.

வள்ளுவரும் ஏசுநாதரும்

சமயச் சான்றோர்கள். தலைவர்கள் கூறுகின்ற கருத்துக்களைத் தெளிவாகத் திருக்குறள் கூறக் காண்கின்றோம்

ஏசுநாதர், ''ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டு'' எனக்கூறியுள்ளார். இக்கருத்தை

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

எனக் கூறிச்செல்லும் முறை வியந்து வியந்து போற்றுதற்குரியதாகும்.

உண்மை இன்பம்

வாழ்க்கை நன்முறையில் அமைந்து எளிதில் பல பெறுவதற்குக் குறள் வழி காட்டுகிறது. 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' எனக் கூறும் வள்ளுவர், 'அறத்தால் வருவதே இன்பம்' எனக் கூறி உண்மை இன்பத்தை உறுவதற்கு நெறி வகுத்துச் செல்கின்ற முறை சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும். (அடுத்த பக்கம்)

★ உள்ளே ★

உண்மைக் கூட்டரசு கிலைக்கவேண்டுமானால் ...
தொல்காப்பிய விளக்கம்
திருக்குறளில் உருவகம்
வள்ளுவரும் அரசியலும்
செந்தமிழ் மறவன் சின்னச்சாமி பூங்கோதை
இன்னும் பிற ... ...

தமிழின் உயர்வே தமிழர் உயர்வு

செந்தமிழ் மறவன் சின்னச்சாமியின் வாழ்க்கைக் குறிப்பு.

பிறப்பு : தாதுஆண்டு ஆடித்திங்கள் 16ஆம் நாள் வெள்ளிக் கிழமை (30—7—1939) இரவு எட்டு மணி.

தந்தை : ஆறுமுக முதலியார்

தாய் : தங்காள்

ஊர் : கீழப்பழூர், உடையார்பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம்.

படிப்பு : ஐந்தாம் வகுப்பு.

திருமணம் : ஏவிளம்பி ஆண்டு ஆவணித் திங்கள் 20ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9மணி சீர்திருத்த முறையில் செல்வி கமலம் என்பாரை மணந்தார்.

மணமகளின் தந்தை : வையாபுரி முதலியார்

.. தாய் : விருத்தாம்பாள்

ஊர் : ஆடுதுறை, பெரம்பலூர் வட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

புதல்வி : இவர்கள் இருவருக்கும் பிலவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 18ஆம்நாள் வெள்ளிக்கிழமை இரவு 11மணிக்கு பெண் குழந்தை பிறந்தது அதற்குத் **திராவிடச் செல்வி** எனப் பெயர் சூட்டியுள்ளார் செந்தமிழ் மறவர். வாழ்க்கைத் துணைவி கமலத்துடனும் மழலைக்கேயத் திராவிடச் செல்வியுடனும் மகிழ்வுறம் நடாத்திக் கொண்டிருந்த செந்தமிழ் மறவர் சின்னச்சாமி தைத்திங்கள் 11ஆம் நாள் (24—1—64) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குச் சர்க்கரை வழங்கினர். 9 மணிக்குமேல் வயலுக்குச் சென்று வருகின்றேன் என்று கூறிவிட்டுச் சென்றார். சனிக்கிழமை காலை 4 மணிக்குத் திருச்சிச் சந்திப்பு புகைவண்டி நிலையத்தில் தன் உடலில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தீ மூட்டிக்கொண்டார். தீச்சுடரில் மூழ்கியவர் "**தமிழ்வாழ்க! இந்தி ஒழிக**" என்று கூறிக்கொண்டே இருந்தார். உடல் அணு அணுவாக வெந்து ஆவி நீங்கியபோதும் அன்னைத் தமிழை மறந்திலர். செந்தமிழ் வென்றது. செந்தமிழ் மறவனின் பூதவுடல் நீங்கியது; புகழுடல் என்றும் நிலைத்தது. மறவன் சின்னச்சாமி வண்டமிழ்க் காக்க மாண்டான். வாழ்க அவர் புகழ்! வளர்க தமிழ்.

சின்னச்சாமியை இழந்து ஆறுத்துயரத்தில் வருந்தும் அவர் மனைவி கமலத்துக்கும் புதல்வி திராவிடச் செல்விக்கும் அவர் அன்னைக்கும், ஏனைய உறவினர்க்கும் எம் உளமார்ந்த ஆறுதல்கள்.

அன்னை மொழிக்கென ஆருயிர் நீத்தார் — அவர்தாம்
சொன்ன மொழிதனை நாம்மறவோமே.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வள்ளுவர் அரசியலில் பெரியாரைத் துணைக்கோடல்

உலக நாடுகளில் அமெரிக்கா சிறந்து விளங்குவதை அனைவரும் அறிவர். சட்ட அமைப்புக்களாலும் நெறி முறைகளாலும் இணையின்றி விளங்கும் எழில்மிகு அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு ஆட்சி முறையில் வழிகாட்டியாக இருப்பதை நாம் என்று அறிவோம். அங்குள்ள அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் உதவியை ஒவ்வொரு துறையிலும் விரும்பி ஏற்றுச் செயலாற்றுதலே அதற்கு முக்கிய காரணம் ஆகும். அறிஞர்களைப் போற்றும் மனப்பான்மை வளர்தல் வேண்டும். வள்ளுவர், பெரியாரைத் துணைக்கோடல் பற்றியும் அவர் தம் இடித்துரைபற்றியும் விரிவாகக் கூறியுள்ளார் என்பதை நாம் உணர்தல் வேண்டும்

இன்பம் பற்றி வள்ளுவர்

இன்பத்துப்பால் இயம்பும் உயரிய கருத்துக்களை நாம் உளம் கொள்ளுதல் வேண்டும். தலைவனைப் பற்றியும் தலைவியைப் பற்றியும் குறள் கூறும் கருத்துக்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை ஆகும்.

'செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'

என்பது போன்ற, விழுமிய கருத்தினை ஏற்று நிற்கும் குறள் ஏராளம்! ஏராளம்!!

திருக்குறட் பெருமை

அறத்தைப் பற்றிப் பேசுகின்ற நூல்கள் பலவாக இருந்தபோதிலும் திருக்குறளைப் போலச் சிறந்ததொரு நூலினைக் கண்டிலேன். எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை பெரும்புலவர் பலர் திருக்குறட் சிறப்பினைத் தெளிவாகப் பாடியுள்ளனர்.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனை அறமுதலா அன்றான்கும் - ஏனைருக்கு
ஊழி னிரைத்தாற்போல் ஒண்ணீர் முகிலுக்தும்
வாழியுல கென்னுற்றும் மற்று

என நக்கீரர் வள்ளுவரின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார்.

எழுச்சி கொள்க!

வேற்றுமைஉணர்வுகளைநீக்கி ஒற்றுமையினைப்பரப்பு வீரராக! 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதை உணர்ந்து போற்றுவீராக! 'செய்க பொருளை' என்பது குறள் நெறி; பொருள் வளம் பெறத் தொழில் வளத்தைப் பெருக்குவீராக! கற்றுத் துறை போய முத்தமிழ்ச் செல்வர்களாகத் திகழ்வீராக! எழுச்சி கொள்க! புதுமை காண்க! குறள்நெறி வாழ்க! வாழ்க வள்ளுவம்.

"கெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்"

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே

மொழி வழிச் சிந்தனைகள் 1

— 'தமிழண்ணல்'

காரைக்குடியில், நான் வேலை பார்த்துவந்தேன். அப்போது மதிப் பிற்குரிய பேராசிரியப் பெருமகனார் ஒருவர், அமெரிக்க நாட்டு நல்லுதவியின்பேரில், பல கல்வி நிறுவனங்கட்கும் சென்று சொற்பொழிவாற்றி வந்தார். ஆங்காங்குப்பேசும்போது அவர் தமிழிலேயே பெரும்பாலும் பேச நேரிட்டது. அப்போதெல்லாம் அவர் 'பெரியோர்களே! எனக்குத் தமிழில் பேச வராது. ஆங்கிலத்தில் ஊறிப்போனவன் நான். செந்தமிழை அறியேன். கருந்தமிழிலேதான் பேச வேண்'' என்ற முன்னுரையைத் தொடர்ந்து பல இடங்களிலும் கூறி வந்தார். அதாவது பேச்சுவழக்குத் தமிழிலேதான் பேசுதல் இயலும்; இலக்கிய நடையில் பேசத் தெரியாது என்பது அவரது கருத்தாம்.

எனினும் என் தமிழாசிரிய நண்பர்கள் பலர் அப் பேராசிரியர் பால் சீற்றம் கொண்டார்கள். அவர் பெரும் பொறுப்பில் இருந்ததால் மேடை ஏறி உரைக்கவும் பயந்தார்கள்.

செந்தமிழ், பைந்தமிழ், கன்னித் தமிழ், வண்டமிழ், தண்டமிழ் என்றெல்லாம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இலக்கியப் பெரும் புலவர்களும், நாற்றுண்டுதோறும் பாராட்டிப் பரவிய நம் தாய்த் தமிழை ஒருவர் என்றுமில்லாத வகையில் 'கருந் தமிழ்' என, இழிவு படுத்தும் நோக்கம் இல்லாத நிலையில் கூறியிருப்பினும், சினம் தோன்றுதல் இயற்கையே.

ஆனால், அதற்காக அப் பேராசிரியர்பால் மாறுகொண்டு பகைமை பாராட்டுவதில் பயன் என்ன! அதிலிருந்து நாம் ஒருண்மையை உணர்ந்தோமானால் உண்மையிலேயே பயனுண்டு.

இன்று பேச்சுத் தமிழ் மிகவும் மருவி வழங்குகின்றது. அதனை அப்படியே இலக்கியத்தில் ஏற்றி வழங்க முற்படுகின்றனர். மொழியை நாடெங்கும் பரப்பும் மூன்று பெருங் கருவிகளாகிய வானொலி, திரைப் படம், செய்தித்தாள் ஆகியவை முத் தமிழையும் ஒருசேரக் கருந்தமிழாக்கி வருகின்றன. இங்கிலீசையை மாற்றித் தமிழ்ப்பேரறிஞர்களும், பெரும் புலவர்களும் ஒரு படி கீழிறங்கிவந்து, பொதுமக்களை நல்ல தமிழறிவுடையவர்களாகச் செய்வதே, 'கருந்தமிழைப்' போக்கச் செய்யும் உண்மையான தொண்டாகும். நாற்றுண்டு தோறும் காப்பாற்றப்பட்டு வந்த தமிழை - நமது நூற்றாண்டில் நாம் வழுவவிட்டோம் என்ற குறைபாடு நம்மீது வராமல் நாம் நடந்துகொள்ளுதல் வேண்டுமன்றோ?

மொழிவழிச் சிந்தனைகள் அதற்குத் துணைபுரியும் என்பது என் நம்பிக்கை

★ ★ ★

'கற்கண்டு' என்பதை ஒருவர் 'கல்கண்டு' என்றேசொல்லியும் எழுதியும் வருகிறார். 'பற்பொடி' என்பதை இன்று 'பல்பொடி' என்றே எழுதுகிறார் இவ்வாறெல்லாம் எடுத்தாள்கிறாரே, இவருக்குத் தமிழறிவு குறைவோ என்றால், அதுவும் இல்லை. தமது பெயரே 'தமிழ்வாணன்' என்று கூறுகிறார். எதிர்காலத்தில் அவர் பெயரையும். இச் சொல்லாட்சிகளையும் காணும். கேட்கும் இளம் உள்ளங்கள் 'தமிழ்வாணர்' செய்ததுதவறென்று கூறுமா? வாழ வழி காட்டுபவரும், வள்ளலார் வழி நிற்பவரும், உலகச் செய்திகளையெல்லாம் உள்ளங்கவரும் வகையில் எடுத்துக்கூறுபவரும், தமிழின்பால் பேரன்புடையவருமாகிய ஒருவர் இங்ஙனம் செய்தல் நம் தவக் குறைவேயாகுமன்றே?

★ ★ ★

''பெரியாற்று நீர்ப் பாசனத் திட்டம்'' மதுரை மாவட்டம் முழுவதும் செயற்படுத்தப்படுகிறது. அத்திட்டம் செயற்படுத்தப்படும் இடமெல்லாம் நமது மாநிலப் பொதுப் பணித் துறையினர் (P. W. D) ''பெரியார் நீர்ப்பாசனத் திட்டக் கால்வாய்'' என்பதுபோலவே எழுதி வைத்துள்ளனர்.

எதிர் காலத்தில் இப்பெயர்களைக் காண நேரும்போது, ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் ''பெரியார் பெயரால் இத் திட்டத்தைக் காமராசர் செயற்படுத்தி அமைத்துள்ள விதத்தைப்பாராட்டி'' எழுதிவிடுதல் கூடுமல்லவா? அதற்கு இன்று பெரியார் காமராசரை ஆதரித்துவந்த அரசியல் நிகழ்ச்சிகளையே அவர் சான்றுகளாகக் காட்டி நிறுவிவிடுதல் கூடுமன்றே?

பெரியாறு + நீர்ப்பாசனம் = பெரியாற்று நீர்ப்பாசனமாகுமேயன்றி 'பெரியார்'' என ஆதல் எங்ஙனம்? குற்றியலுகர ஈறு குறுகிஒலிப்பதால் அங்ஙனம் எழுதிவிட்டனர் போலும், ஆனால் நாம் செய்யும் இன்றைய தமிழ் எழுத்துப் பிழை, எதிர்கால 'வரலாற்றுப் பிழையாக'' வளருமென்பதை நாம் மறக்கலாமா? சிந்தித்துப் பாருங்கள்.

(தொடரும்)

புரட்சி நடிகர் - மக்கள் திலகம்
வழி காட்டுகின்றார்.

செந்தமிழ் காக்கச் சென்றே மூழ்கிய செம்மல் **சின்னச்சாமி குடும்பத்திற்கு 5000 வெண் பொற்காசுகள்** புரட்சி நடிகர் **இராமச்சந்திரன்** அளித்துள்ளார். சின்னச்சாமி குடும்பத்திற்கு உதவிய புரட்சி நடிகரைப் பின்பற்றிப் பலரும் உதவவேண்டுகின்றோம்.

திருமதி ரி. கமலம் சின்னச்சாமி
கீழப்பழூர், அரியலூர் வழி,
திருச்சி மாவட்டம். எனும்

இம் முகவரிக்கு அனுப்பிவிட்டுத் தெரிவித்தால் அனுப்பிய விவரம் 'குறள்நெறி' யில் வெளியிடப்படும் என அறிவித்துக் கொள்கின்றோம். அன்னைமொழிக்கென ஆருயிர் விட்ட செம்மலின் குடும்பத்தைக் காக்கவேண்டியது செந்தமிழ் நாட்டாரின் சீரிய கடனுகும்.

ஈத்துவக்கும் இன்பம் பெறும் வள்ளல் புரட்சி நடிகரைப் பின்பற்றவேண்டுகின்றோம். ஆசிரியர்.

குறள்நெறி இயக்கம்

திருக்குறள் நெறியில் மக்கள் வாழ்வரேல் மக்களாட்சி சிறப்புற்று ''எல்லோரும் ஓர் குலம்'' எனும் ஒருமைப்பாட்டுடன் அனைவரும் இன்ப வாழ்வினை எய்துதல் கூடும். ஆகவே குறள்நெறியைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு ''குறள்நெறி இயக்கம்'' தோன்றியுள்ளது. குறள்நெறியை ஏற்று வாழ்வோரெல்லாரும் குறள்நெறி இயக்கத்தில் உறுப்பினராவார். இவ்வியக்கத்தில் உறுப்பினராகிக் குறள்நெறியை மக்களிடையே சொல்லாலும் செயலாலும் பரப்ப விரும்புவோர் **திருக்குறள் நெறியில் வாழ்வதற்கு உறுதி பூண்டுள்ளேன்** என உறுதிமொழி கூறிக் கையெழுத்திட்டு முகவரியை அறிவிப்பின், **'குறள் நெறியில் வாழ்வோர்'** எனும் தலைப்பில் 'குறள்நெறி' யிதழில் தொடர்ந்து வெளியிடப்படும்.

''குறள்நெறி பரவின் குடியரசு ஓங்கும்''

செயலாளர், **'குறள்நெறி இயக்கம்'**
சி.17, திருநகர், மதுரை-6.

அலுவலகங்களில்

ஆட்சித்தமிழ்

— க. சுகன்னதன்

அரசாங்க அலுவலகங்கள் அனைத்திலும் (ஒரிரு துறைகள் தவிர) இன்று தமிழ் ஆட்சி மொழியாக நடைமுறைக்கு வந்து விட்டது. ஆனால் எந்த அளவுக்குத் தமிழை அலுவலகங்களில் எவ்வளவு கையாள முடியுமோ அந்த அளவுக்குக் கையாளப்படுகிறதா? என்றால் நிச்சயமாக இல்லை என்று கூறிவிடலாம் — காரணம் — ஆங்கிலத்தை எளிதாக எழுத முடிகின்ற அளவுக்குத் தமிழில் எழுத முடிவதில்லை யென்றும், ஆங்கிலத்தை விடச்சொல்ல வந்தகருத்துக்களைச் சொல்ல மிகுதியாக எழுத வேண்டியிருக்கிறது என்றும் பல அலுவலர்கள் நினைக்கிறார்கள். தவிர, ஆட்சித்துறைகளில் கையாள வேண்டிய கலைச்சொற்களைத் தமிழில் புதிதாக எழுதுவதற்குப் பெரிதளவு தயக்கமும் கொள்கிறார்கள்.

ஆனால், அது தவறு — ஆங்கிலத்தில் எழுதுவதைவிடச் சுருக்கமாக, சொல்ல நினைக்கும் கருத்துக்களை இனிமையாக, தெள்ளு தமிழ்க் கலைச் சொற்களைச் சுவையுற எழுதமுடியும் — சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் வேறெந்த மொழியையும்விடத் தமிழுக்குத்தான் மிகுதியாக உண்டு என்பதைப் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம். இந்த முன்னுரையை மனதிற்கொண்டு நாடெங்கிலும் உள்ள ஆட்சி அலுவலர்கள் இதை உன்னிப் படித்துச்சிறிதுஊக்கமும் காட்டுவார்களானால் இன்று கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அலுவலகங்களில்இலக்கிய மணம் கமழ அலுவல்களைநடத்த முடியும்.

தமிழ் நாட்டு அரசாங்கம் ஆற்றியுள்ள பலஅரிய செயல்களுள் தமிழை ஆட்சிமொழியாக்கியது மிகவும் சிரியஒன்றாகும். 1956ஆம்ஆண்டு அதற்கென ஒரு சட்டத்தையும் இயற்றி ஆட்சி அலுவலகங்களில் தமிழ் செழித்து வளரத் துணைபுரியும் பொருட்டுஆட்சிமொழிக்குழுஒன்றையும் நியமித்துச் செயல் படுத்தத் தொடங்கிற்று. அரசாங்கத்தின் பல வேறுதுறைகளிலும்பலகட்டங்களில் படிப்படியாக அதைநடைமுறைக்குக் கொண்டுவர ஆணையிட்டது. அப்படிச் செயல்படுத்துவதற்குவசதியாக ஆங்கிலத்திற்குப் பதிலான ஏராளமான ஆட்சிக் கலைச்சொற்களைப் புதிதாக உருவாக்கியும் ஏற்கனவே நாட்டுவழக்கிலிருந்துவரும் பலசொற்களை எடுத்துக்கொடுத்தும் "ஆட்சிச் சொல்லகராதி" ஒன்றையும் வெளியிட்டது.

ஆனால், பலஆண்டுகளாக ஆங்கிலத்திலேயே குறிப்புக்களும் வரைவுகளும் எழுதி, பேசும்பொழுதும் பாதி ஆங்கிலமும்பாதித்தமிழுமாகப்பேசிப் பழகிவிட்ட பிறகு, புதிதாக உருவாக்கித்தொகுக்கப்பெற்ற ஆட்சிச்சொல்லகராதியைப் பார்த்த போது, அது புதுமையாகவும், சுவையற்றதாகவும் கூடப் பலருக்குத் தோன்றியது. தமிழார்வம் கொண்ட இளைஞர்களுக்குக்கூட புதிதாகச் சொற்களைப்படித்தபோதுபல சொற்கள்மெருகற்றவையாகத் தோன்றின. ஆனால் 1962-ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆட்சிச் சொல்லகராதியின் இரண்டாம் பதிப்பில் இன்னும் பல புதிய சொற்களைச் சேர்த்தும், ஏற்கனவே தமிழாக்கம் ஆன சொற்களில் சிறிது மெருகேற்றியும், மாற்றியும் ஒவ்வொரு துறையினருக்கும் உரிய தனிக்கலைச்சொற்களை உருவாக்கியும் தந்திருக்கின்றனர், ஆட்சி மொழிக்குழுவினர்.

தொடக்கத்தில் ஒவ்வொருகட்டத்திலும் சிற்சில துறைகளில் மட்டுமே ஆட்சித்தமிழ் அறிவிக்கைச் (Notification)செய்யப்பெற்று நடைமுறைக்கு வந்ததால், அந்தத்துறையினர் மட்டுமே, தமிழில் குறிப்புக்களும் கடிதங்களும் எழுதும் பேறு பெற்றனர். அறிவிக்கைச்செய்யப்படாத இதர அலுவலகங்களில் தொடர்ந்து ஆங்கிலமே இருந்துவந்ததால், தமிழ் வந்த, வராத அலுவலகங்களுக்கிடையே நடைபெற்ற கடிதப்போக்குவரத்துக்களில் தமிழும் ஆங்கிலமும் கலந்துறவாடும் சூழ்நிலையில் தமிழின் பங்கு மிகச்சிறியதாகவே யிருந்தது. ஆங்கிலமே மேலோங்கி நின்றது.

ஆனால் இன்று பெரும்பாலும் அரசாங்கத்தின் எல்லாத்துறைகளிலுமே தமிழ்நடைமுறைக்குவந்துவிட்டதால் மேற்க்கண்ட இனங்கள் தவிர, மற்றக் கடிதங்கள் அனைத்தையும் குறிப்புக்களையும் தமிழிலேயே எழுத முடியும்.

1) தணிக்கைக்கு உட்படும் ஊதியப் பயணப்பட்டியல்களும் அரசாங்க கணக்குத்துறைத்தொடர்பானவையும்.

2) மாநிலக் கணக்குத்துறைத் தலைவருக்கு எழுதும் கடிதங்கள்

3) அரசின் அமைச்சகம்

4) நீதி மன்றங்கள்

5) மைய அரசாங்க அலுவல்கள் முதலியன

மேலே சொன்ன இனங்களுக்குக்கூட அவற்றின் தொடர்புள்ள கட்டுகளில் குறிப்புக்களைத் தமிழிலேயே எழுதி அலுவலரின் ஆணைக்கு வைக்கலாம். அலுவலரின் ஆணைபெற்றுத்திரும்பக் கட்டுகள் வந்தபின் அந்த ஆணையின்படி எழுதும் கடிதங்களை மட்டுமே ஆங்கிலத்தில் எழுதினால் போதுமானது. தவிர இதர அலுவலகங்களிலிருந்துஅல்லது பொதுமக்களிடமிருந்து வரும்கடிதங்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும், மேலேகண்டதுறைகள் தொடர்பான கடிதங்களையும் தமிழிலேயே மொழிபெயர்த்துத்தன் பதிவேடுகளில் பதிந்து நடவடிக்கை யெடுக்கலாம். ஏற்கனவே அலுவலகங்களுக்குக் கொடுக்கப்பெற்ற எல்லாப் பதிவேடுகளிலும் தலைப்புக்கள் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தாலும், புதிதாகப் போடும் பதிவுகள் தமிழிலேயேஇருக்கலாம். ஆகவே அலுவலகங்களில் பொதுவாக 70 முதல் 80% வரைதமிழிலேயேஎழுதவாய்ப்பிருக்கிறது. மீதியுள்ளவை20 முதல் 30% மேற்சொன்ன அலுவலகங்கட்கு எழுதும் கடிதங்களும், பணப் பட்டியல்களும் தணிக்கைக்குரிய பகுதிகளும் ஆகும்.

இவ்வளவு விரிவாகத் தமிழை அலுவலகங்களில் பயன்படுத்த முயலுகின்றபோது பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றலாம்: தோன்றுகின்றன. விரைவாக எழுத முடியவில்லையே என்பது போன்ற ஏக்கமும் ஏற்படலாம். இப்படி ஏற்படுவது இயற்கைதான் என்பதை, இளைஞரும் தமிழார்வமிக்கவரும் ஆன அரசிதழ்ப் பதிவுபெற்ற ஒரு உயர் அதிகாரி தன் அலுவலகத்தில், 'தமிழாட்சி'த்தொடர்பாக நடவடிக்கை யெடுக்கப்பட்ட கட்டில், கீழ் வருமாறு அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழாட்சி அறிவிக்கை செய்யப்பட்ட அலுவலகத்தில் எழுதப்பட்ட முதல் தமிழ்க்குறிப்பு இது!

"ஒரு குழந்தை பிறந்தவுடனேயே நடந்து விடுவதில்லை. வளர்ந்து தத்தித் தளர்நடை போட்டுப் பிறகுதான் நன்றாக நடக்கத்தொடங்கும். நடக்கும்போது தள்ளாடிக் கீழே விழுகிறதே யென்பதற்காக எந்தத் தாயும் குழந்தையை நடக்காமல் இருக்க விடுவதில்லை. மேலும் மேலும் நடக்கவே பழக்குகிறாள். அதுபோலத்தான் அலுவலகங்களில் ஆட்சித் தமிழும். தொடக்கத்தில் பல தடைகள் தோன்றலாம். அதற்காகச் சோர்வுற்று நின்றுவிடக் கூடாது. தமிழிலேயே இனி எல்லாவற்றையும் எழுதுவோமாக.

எண்ணித் துணிக கருமம்;
துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு —

இனி, மேல் நடவடிக்கை எடுக்கலாம்". (சொற்களில் சிறிது மாற்றமிருக்கலாம். எனினும், சாரம் இதுதான். இந்தக் குறிப்பு எவ்வளவு சுவையோடும் இலக்கிய நயத்தோடும் அமைந்திருக்கிறது பார்த்தீர்களா? எடுத்த எடுப்பிலேயே பொதுமறையான குறள் ஒன்றையும் தக்க இடத்தில் சரியான மேற்கோளாகக் காட்டியிருப்பதே, தமிழை அலுவலகங்களில் எவ்வளவு இனிமை பயக்க வெற்றிகரமாகக் கையாள முடியும் என்பதற்கு ஒரு சிரிய எடுத்துக்காட்டாகும். அலுவலக மேலதிகாரி ஒருவர், தமிழறிவு பொங்க இப்படி வழிகாட்டினால் அந்த அலுவலகம் சிறந்ததோர் இன்பத் தமிழ்ப்பூங்காவாகப் பூத்துக் குலுங்காதா?

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

இன்றைய உலகில்

நெடுங்கதை இலக்கியம்

(கோ. மோ. காந்தி எம்.ஏ.)

இன்றைய இலக்கியத்தில் நெடுங்கதையின் (Novel) பங்கை அளவிட முடியாது. இன்றைய இலக்கியத்தின் பெரும் பகுதியும் அவைகளே என்றாலும் மிகையாகாது. நெடுங்கதைகளில்தான் இன்றைய இலக்கியம் மிக்க உயிர்பெற்று ஆற்றல் வாய்ந்ததாய்க் காட்சி அளிக்கின்றது. கவிதைகள், கட்டுரைகள், இசைநாடகங்கள் முதலியன அறிவாளிகளே மாந்திரம் நாடியிருக்கும்போது, ஏழை முதல் மற்றனைவரும் நெடுங்கதைகளையும் சிறுகதைகளையும் நாடுகின்றனர். வாரமாத ஏடுகளில்வரும் தொடர் கதைகளைப் படிக்க ஏக்கத்துடனிருக்கும் எத்தனையோ நேயர்களைக் காணும்போது நெடுங்கதைகளின் ஆற்றலைப் பற்றி நாம் நன்கு அறிய முடிகிறது.

இன்றைய நெடுங்கதைகளில் குறிக்கப்படாதன மிகச்சிலவே! இந்த உலகையும் அதில் விளங்கும் பொருட்களையும் கற்பனைக் கண்ணுல் பார்க்கும் ஆசிரியனுக்கு எதுவுமே வேண்டாதனவில்லை. கண்ணுக்கெட்டாத வானுலகும் மனத்தினுள் புதைந்து கிடக்கும் 'உள் மனமும்' இந் நெடுங்கதைகளில் பலவகைகளில் உருவெடுப்பதை நாம் அறிவோம். பல்வேறு வகை வாழ்க்கை நிலைகளைப் பல்வேறு வகைக் கோணங்களில் நெடுங்கதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதனால்தான் இவ்விலக்கியம் மற்றை இலக்கியத் துறைகளைவிட மிக்கவளம் பொருந்தியதாகவும், மக்களை இலகுவில் தன் வசப்படுத்தும் தன்மை வாய்ந்ததாகவும் விளங்குகின்றது.

நெடுங்கதைகள் பல வெளிவந்த போதிலும் அவைகளின் அடிப்படை உணர்வுகள் மிகச்சிலவே! சாதாரணமாகக் காதலுணர்வைப்பல கோணங்களில் காணுகிறோம். வீரமும் காதலும் கலக்கும்போது படிப்போர்க்கு உற்சாகம் பிறிடுகிறது. இத்தகைய உணர்வுகளைப் பிரதிபலிக்க எழுந்த பல சரித்திரக் கதைகளுமுண்டு. மேலும் மனிதனின் குறைகளைக் காட்ட எழுந்த பல விசித்திரமான தும் வினேதமானதுமான பலவகைக் கற்பனைகள் புதினங்களாக (நெடுங்கதைகளாக) மாறி மக்களைத் திருத்த முற்படுவதுமுண்டு.

ஆனால் பொதுவாக நெடுங்கதைகளில் காதலுக்கே முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. வீட்டைவிட்டு வெளிச் சென்று கொடிய போரிடும் ஆண்மகனின் வீர உணர்வை விட வீட்டிலே அடைபட்டிருக்கும் பெண் மகளின் காதலுணர்வு பெருமை வாய்ந்ததாகவிளங்குகிறது. மக்களின் இன்ப ஊற்றுக்களை ஊறச் செய்யும் காதலுணர்வு மற்றை உணர்வுகளை வென்று துன்பத்துடன் போராடும் ஆற்றல் படைத்திருப்பதனால் தான் இந்த உணர்வை நெடுங்கதைகளில் புகுத்திப் பெருமைப் படுத்தினர்கள் போலும்! வீரம் காதலுடன் ஒன்றின் அதற்குப் பெருமையுண்டாம்; ஆனால் காதல் வீரத்துடன் ஒன்றத் தேவையில்லை.

சாதாரணமாக இத்தகைய நெடுங்கதைகள் அன்றாட வாழ்க்கையைப்படம்பிடிப்பதாகஅமைகின்றன. பல்வேறு வகைப்பட்ட மக்களிடம் காணப்படும் அடிப்படை மன உணர்வுகள் வெவ்வேறல்ல என்பதைக்காட்டும்போது. நெடுங்கதைகள் மனிதர்களின்ஒற்றுமையைப்பெருக்குவிக்கும் ஆற்றல் படைத்தனவாய் விளங்குகின்றன. பொதுவாகத் திகழும் மக்களின் அடிப்படை உணர்வுகளின் முன்னர் சாதி, சமயம், மொழி, இனம் எனும் பாகுபாடுகள் எங்ஙனம் எழமுடியும்?

தற்காலத்தில் வெளிவரும் நெடுங்கதைகள் வாழ்க்கையின் அடிப்படையாக விளங்கும் ஒரு முக்கிய உணர்வை வலியுறுத்தத் தவறி விடுகின்றன என்பதைச் சிறிது சிந்தித்தால் பொதுவாக விளங்கும் இறையுணர்வு நம் பண்பாட்டின் அடிப்படை. இந்த அடிப்படை உணர்வு இவ்வுலகத்தையும் மறுமை உலகத்தையும் இணைக்கும் தன்மை வாய்ந்தது. உயர்ந்த நூற்களைப் படிக்கும்போது, இவ்வுணர்வின் தன்மை இனிது விளங்கும் இத்தகைய இறையுணர்வை – உணர்வுக்கும் உணர்வாக விளங்கும் ஒன்றை - இன்றைய நெடுங் கதைகளில் காண்பது அருகிக் கொண்டே வருகிறது. சமுதாயச் சீர்திருத்தம், புரட்சி, காதல், வீரம் முதலியன வழக்காகயிருக்கும் இக்காலத்தில் சமயத்தின்பாற்பட்ட அனுபவ உணர்வுகள் கண்டிக்கப்படுகின்றன. இதற்குச்சமயத்தைப் பற்றி உண்மையிலேயே தெரியாமலிருப்பது ஒருகாரணமாகயிருக்கலாம்; அல்லது சமய உணர்வை இலக்கியத்தில் உயிரூட்ட முடியாமையாயிருக்கலாம். எங்ஙனமிருந்தாலும் சமய உணர்வின் பாற்பட்ட இறைமையும் அதைச் சார்ந்த பெருமை வாய்ந்த மெய்யறிவுத் தத்துவங்களும் நெடுங்கதைகளைப் புனையும் கற்பனையில் இணையாதவரை அக்கற்பனைகள் பருப்பொருளாக விளங்கும் இவ்வுலகை மாத்திரம் பற்றியதாகவே அமையும். இதனால் நெடுங்கதைகளில் தென்படும் பாத்திரங்கள் மக்களின் அடிப்படை உணர்வுகளைத் தாண்டுவதில்லை. மேலும் இத்தகைய இலக்கியத்தில் கூறப்படும் காதலும் வெறுங் கற்பனையாகத் திகழ்ந்து பின்னர் மறைந்தொழிகிறது. நம் உள்ளமும் உணர்வு பெறுவது கிடையாது. இவ்வகை நெடுங் கதைகள் உலக இன்ப துன்பங்களை அறிவிக்க முயலலாம்; ஆனால் அவற்றிற்குக் காரணமாக விளங்கும் மூலப்பொருளை அறிய முடியாதகாரணத்தால்வலுவிழக்கின்றன. இதனால் இன்ப துன்பங்களினின்றும் விடுபடுவதுஇயலாததொன்றாகிவிடுகிறது. தற்கால நெடுங்கதை இலக்கியத்தில் மலிந்துவரும் இக்குறையை ஒரு நோயெனக்கொள்ளலாம். இந்நோயைத் தவிர்க்க முற்படுவது நெடுங்கதை ஆசிரியர்களின் ஒருபெருங் கடமையாகும்; தவிர்க்க மறுப்பது நோயைப் பெருக்க வழி கோலுவதாகும்.

நெடுங்கதையில் தென்படும் துவக்கம், நடுப்பகுதி, முடிவு முதலிய பகுதிகள் ஆசிரியரின் கற்பனை வளத்தைப் பொறுத்துப்பலவகையாக அமைந்து கிடக்கின்றன. இதனால் எத்தகைய கற்பனையையும் இலக்கியமாக்க முடியுமென்றிருந்தாலும் இவ்வழியில் ஒரு முக்கிய குறை தென்படுகிறது. அஃதாவது,ஓர் ஆசிரியன்தன் மனம்போன போக்கில் செல்ல வழியேற்படுகிறது. தான் நினைக்கும் கற்பனைகளில் ஊறும் உணர்வை மற்றவர்களுள்ளும் எழுப்பவிரும்பும் ஆசிரியனுக்கு இத்தகைய கற்பனைகள் — மனம்போன போக்கில் எழும்கற்பனைகள்-பல தீங்குகளை விளைவிக்கின்றன. இலக்கியம் என்ற பெயரால் இன்று இத்தகைய நெடுங்கதைகள் பல வெளி வருகின்றன. உளவியல்புகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பெறும் நெடுங்கதைகளில் இத்தகைய ஒழுங்கீனங்களைக் காணலாம். மனிதனின் மனம் ஒரு புதிர்! பல எண்ணங்களைக் கோவையற்ற நிலையில் எண்ணும் தன்மையும் அதற்குண்டு. அதனால் கோவையற்ற சிந்தனைகளை மாத்திரம்கொள்வது சிறப்பன்று. அடிப்படையாக விளங்கும் உணர்வால் இத்தகைய கோர்வையற்ற எண்ணங்களைக் கோர்வைப்படுத்தலாம். இது ஆசிரியனின் திறமையைப் பொறுத்தது. இத்தகைய அடிப்படையற்ற நெடுங்கதைகளில் வரும் பாத்திரங்கள் புயலில் அகப்பட்ட துரும்புபோல்வேகமாகச்சுழன்று கொண்டே யிருக்கின்றன. இன்றியமையாத வாழ்க்கைத் தத்துவங்கள் இதனால் புதைபடலாம். ஒழுங்கற்ற வாழ்வை நடத்துபவர்களுக்கு இத்தகைய நெடுங்கதைகள் நிம்மதியைத் தந்தாலும், நல்வாழ்வை விரும்பும் பலருக்கு இவைகளால் அமைதி ஏற்படுவது முடியாத காரியமாகிவிடுகிறது. இதனால் இலக்கியத்தின் பெருமையும் வாழ்வும் குன்றுகிறது.

நெடுங்கதையின் நீளம் குறிக்கற்பாலது. பல நெடுங்கதைகள் பல காரணங்களால் தேவைக்குமேல் நீட்டப்படுகின்றன. கதையின் வளர்ச்சிக்கு நீளம் தேவைதான். அதற்காக நெடுங்கதையின் நீளத்தை தேவைக்கு மேல் நீட்டுவதால் ஆசிரியனுக்கும் படிப்பவர்களுக்கும் உற்சாகக்குறைவு ஏற்படலாம். இதனால் கதையின் நீளத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று பொருளாகாது. வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தை எந்த வகைச் சூழ்நிலையில் விளக்க முற்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் நெடுங்கதையின் நீளம் அமையவேண்டும். தேவையற்ற நீளத்தைக் குறைப்பதால் கதையின் சுவையையும், இலக்கியத்தின் தரத்தையும் நிச்சயமாகப் பெருக்குவிக்கலாம்; வேண்டத்தகாத திடுக்குறும் நிகழ்ச்சிகளை அகற்றலாம்; நெடுங்கதையின் அடிப்படைத் தத்துவத்தை இதனால் நன்கு விளங்க வைக்கலாம். (பக்கம் 7 பார்க்க)

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

... ... ஆட்சித் தமிழ்

தலைமை எழுத்தர் ஒருவர் தம்கீழுள்ள ஒரு எழுத்தர் இரண்டொருமுறை சொல்லியும், மீண்டும் மீண்டும் ஆங்கிலத்திலும். ஆங்கில-தமிழ்க்கலப்பு நடையிலும் குறிப்புக்கள் வரைவுகள் எழுதிவைத்ததைக் கண்டு, ஒரு கட்டில் கொஞ்சம் வேடிக்கையாக

"தனித்தமிழ் எழுதுதற்குத்
தயக்கமேன் தம்பி? இன்னும்!
இனித்திடும் தமிழில் நன்கு
எழுதிடப் பழகு வாயே"

என்று குறிப்புரை எழுதி அனுப்பினர். கவிநடையில் அமைந்த இக்குறிப்புரையைக் கண்ட அந்த அலுவலர் அகமகிழ்ந்து இயன்றவரையில் தமிழிலேயே பிறகு எழுத முயன்றார். அதாவது தாய்மொழியில் சிறிதளவுஆர்வமும் ஊக்கமும் முயற்சியும் இருந்தால் அழகு தமிழில் ஆட்சி நடத்த முடியும் என்பதற்கு இவை நல்ல முன் மாதிரிகள் ஆகும். ஊக்கம்தானே ஆக்கத்திற்கு அழகு?

அரசிதழ்ப் பதிவுபெற்ற அதிகாரிகள் மட்டுமின்றி, பதிவுபெறு மேல்நிலை அலுவலர்கள், கீழ்நிலை அலுவலர்கள் அனைவருக்குமே இம்முயற்சியில் ஊக்கம் வேண்டும். ஆனால்பெரும்பாலானஅலுவலர்களுக்குத்தாய்மொழியின் மீது அவர்கள் காட்டும் ஆர்வத்தின் அளவிற்கு மொழியில் 'பிடிப்பு' இருப்பதில்லை. இது பெரிய குறைபாடு.

எடுத்துக்காட்டாக அலுவலர் ஒருவர் ஒரு நாள் தற்செயல் விடுப்பு வேண்டி விண்ணப்பம் எழுதுகிறார்.- "ஐயா, இன்று எனக்கு உடல்நிலை சரியில்லாததால் இன்று (25-1-64) ஒருநாள் மட்டும் 'சில்லறை விடுப்பு' அளிக்கும்படித் தாழ்மையுடன் கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
தாயுமானசாமி"

இதை எழுதுவதில் இருக்கின்ற ஆர்வம் பாராட்டுதற்குரியது. ஆனால் "கோருகிறேன்" என்றெழுதுவது அஞ்சத்தக்கது. "கோருகிறேன்" என்றெழுதினால்தான் கேட்டுக்கொள்கிறேன் என்றாகும். கோருகிறேன் என்றால் கொல்கிறேன் என்று பொருள். இப்படி எழுதுவதே தமிழைக் கொல்வதுபோல் இருக்கிறதல்லவா? இதில் தாழ்மையுடன் வேறு கொல்லவேண்டுமா? ஆகவே எளிமையாக "ஒருநாள் விடுப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்." என்று எழுதினாலே போதுமானது.

அடுத்து, சில்லறை விடுப்பு என்பதும் சரியன்று, ஆங்கிலத்தில் 'காசுவல் லீவு' (Casual leave) என்பதற்குச் 'சில்லறை விடுப்பு' என்று முதலில் வந்த சொல்லகராதியில் காணப்பட்டாலும் இரண்டாம் பதிப்பில் 'தற்செயல் விடுப்பு' என்றே அமைத்திருக்கிறார்கள். தற்செயலான கடமைகளுக்காக விண்ணப்பிக்கும் விடுப்பை "தற்செயல் விடுப்பு" என்று குறிப்பதே சரியானதாகும். ஆனால் புதிதாக வந்துள்ள இரண்டாம் பதிப்பைச் சரியாக யாரும் படித்துப்பார்த்தார்களிலர். இது அரசாங்க அலுவலர்கள் பலருக்கு இன்னும் தம்மொழியில் 'பிடிப்பு' வரவில்லை என்பதற்குச் சிறிய ஒரு சான்று இந்தப் 'பிடிப்பு' ஏற்படச் சிறிது பயிற்சி தேவை. நல்ல தமிழ் இலக்கிய நூல்களை அடிக்கடி படித்து அவற்றின் சொற்கள், சொற்கோவைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதில் சற்றுக் கருத்துச் செலுத்தினால் அதுவே நல்ல பயிற்சியாகும். ஆட்சிச் சொல்லகராதியையும் கைவசம் எப்பொழுதும் வைத்துக்கொண்டு அடிக்கடி சொல்லமைப்புக்களைப் பார்த்துக்கொள்வது நல்லது. நாளடைவில் மிகச் சிறந்த முறையில் ஆட்சித்தமிழை அலுவலகங்களில் சிறிதும் பிறமொழிக்கலப்பு இல்லாமலேயே பயன்படுத்த இத்தகைய பயிற்சி இன்றியமையாதது வேண்டும்.

இனித் தமிழில் எழுதும்போது அலுவலக நடைமுறையில் உண்டாகும் சிக்கல்களையும் தடைகளையும் அவற்றை எவ்வாறு எளிதாகத் தவிர்க்கலாம் என்பதையும் பார்ப்போம்.

(தொடரும்)

தமிழ் மொழி - தமிழ் நூல்கள் தனிச் சிறப்பும் திருக்குறள் அறப்பெரும் சிறப்பும்

(தூய தமிழ்க் காவலர் அண்ணல்தங்கோ)

— திருப்புகழ் இசைப்பா —

1) உலக முதல்மொழி! நமது தமிழ்மொழி!
உரிமைதரு மொழி! உயர்வுபெறு மொழி!
மலரும் அறிவெழில்! பொழியும் நறுமொழி
— மலிபோலே

2) மணிகள் ஒளிதிகழ் அரிய அறமொழி!
மகிழப் பலகலை உணர்வுதரு மொழி!
மருவும் உயிரெலாம் பயிலவரும் மொழி!
— வளம் நாடும்

3) பலநல் லறிவுளோர் பரவும் பெருமொழி!
பயனுணரும் கலை அறிஞர் புகழ்மொழி!
பரிவோ டருள்புரி பழமை(த்) தமிழ்மொழி!
— பயில்வோர்கள்

4) பழைய குறை – கறை – வறுமை, மடியெலாம்!
பகரும் மணிகொடி தனிலே பொடிசெயும்
பழகி இசையுடன் உலகில் உயர்வுறப்
— பயன்கூட்டும்!

5) கலைகள் எனப்படும் கலைகள் அனைத்தினும்
கலைகள் குறித்திடும் பழைய பொருளினும்
கருத்தில், எழுத்தில் கலைகள் உணர்த்திடும்
— கலைத்தந்தை!

6) கடமை புரிந்திரு மடமை யகன்றிட
கயமை ஒழிந்திட கலைகள் வளர்ந்திட
கடமை யுணர்த்திடும் அரிய திருக்குறள்
— நெறியோங்க!

7) தலைமை தருந்தமிழ் மொழியில் சிறந்திடும்
தமிழ ருயர்ந்திட அறிவு புகன்றிடும்
தகைமை மிகுவகம் - புறம் - சிலம்பொலி
— தழைத்தோங்க

8) தகுதி - உரிமையும் தமிழர் மீனதொறும்
தவழத் தமிழ்மொழி உலகிலரண்பெறத்
தமிழரனைவரும் பணிகள் புரிகுவம்,
— தமிழ்ச்சான்றோர்

9) விலையில் மணிபொருள்! அரிதெனவும் புகழ்
மிகுமினிய தமிழ்க்கலைதொல் காப்பியம்
விளங்க உலகெலாம் தமிழை நாட்டுவோம்
— தமிழ் வேந்தர்

10) விரிந்த உலகெலாம் பரிந்து தமிழ்தனை
விழைந்து புரந்தற அரசு புரிந்தனர்!
வியக்குமவ ரரும் செயல்கள் புரிந்துநாம்
— வெல்வோமே!

எங்கள் கம்பெனியில்
சந்தனுதி அரைக்கீரை விதைத் தைலம்
குளிர்தாமரை, பொன்னுங்கண்ணி,
தைலங்களும், சந்தனம், பன்னீர்
குங்குமப்பூ, வகைகளும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்கும்.

K. M. K.

கார்த்திகேயன் கம்பெனி

திருப்பரங்குன்றம் S. Ry.

வள்ளுவ நெறியினைக் கடைப்பிடிக்க; அதனை உலகெங்கும் பரப்புக.

இரா. கு. நல்லகுற்ருலம்பிள்ளை, B.A., B.L.,
ஓய்வுறும் வழக்குரைஞர், இராசபாளையம்.

தமக்கேயாய தவநெறி (ஒழுக்க நெறி) யாம் அரும்பு, தமக்கும் பிறர்க்குமாய அன்பு நெறியாக மலரும்; பின், அதுபெரிதும் பிறர்க்கேயாய அருள் நெறிக் கனியாகும்; இம் முக்கூட்டு அறநெறியே வள்ளுவமாம். நல்லியல்பாம் பண்புடைமை (goodness the positive basis) யும் பிறர் பழிப்பரெனக் கருதி அஞ்சும் தீவினையச்சமும் (dread of evil, the negative basis) தவநெறி அரும்பாம். இவற்றில் பண்புடைமை, அன்புநெறியில் (the basic principles of life) வாழ்க்கையின் அடிப்படை நாடிகளாகிய அன்பாகவும் வாய்மையாகவும் தீவினையச்சம் தாமே தீவினைக்குக் கூசும் நாணமாகவும் மலரும்; அன்பு தொல்காப்பியர் போற்றும் தமிழகச் சமூகப்பண்பாடு என்பது மட்டுமன்று; அன்பே சிவமெனத் திருமூலர் போற்றும் தமிழகச் சமயப் பண்பாடுமாகும்; திருமூலரின் திருமந்திரம் நம் பொய்யாமொழிக்குப் பின் பிறந்ததாயினும், அது கி. மு. 1500 ஆண்டுகளுக்கு முன் பிறந்த சிவாகமங்களின் சாரமேயாகும். வாய்மையினப்புத்தர் பிரான் போற்றியதுபோலவே நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், எல்லா அறமும் தரும் எனப்போற்றுகின்றார். அன்பின் குழவியாம் அருள் நெறியில், அன்பும் பெருகும்; மற்றும் அறத்தினின்றும் கண்ணோட்டமும் ஒப்புரவும் சுரக்கும். அன்பு, வாய்மை, நாணம், கண்ணோட்டம், ஒப்புரவு ஆகிய இவ்வைந்தும் சால்பு ஊன்றிய (நிறைவினைத் தாங்கும்) தூண்கள்-வள்ளுவப் பஞ்சசீலங்கள். இவையினைத்தும், பௌத்த சமணப் பஞ்சசீலங்கள் போலன்றி நேர்முகப் பஞ்சசீலங்கள். கட்டுப்பாடாக (self-disciplined) எளிதில் கையாளவும் படிப்படியாகப் பெருக்கிக்கொள்ளவும் கூடியன. தம்கருமம், செய்பவரெல்லாம் தவம் செய்பவராவர் (வள்ளுவத் தவசியாவர்): தவநெறியும் அன்புநெறியும் கைவரவுபெற்றவர் வள்ளுவப்பெரியாராவர்; அவற்றோடு அருள்நெறியிலும் நிகழ்பவர் வள்ளுவச் சான்ருேராவர்.

இவ்வருள் நெறியினையே, திருநாவுக்கரசர் தம் மெய்ம்மையாம் உழவைச்செய்து என்னும் பாசுரத்தில், மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் - அன்பெனும் வித்தை வித்தி பொய்ம்மையாம் களையை வாங்கி, (தவநெறியின் உருவாம்) பொறையெனும் நீரைப் பாய்ச்சி (பழிக்குநாணி) தம்மையும் நோக்கிக் கண்டு (ever introspecting and improving the self) தகவெனும் வேலியிட்டு (confining the self only to proper-good things) (கண்ணோட்டமும் ஒப்புரவுமாம்) செம்மையுள் நிற்பராகில் சிவகதி (bliss) வினையுமெனப் போற்றுகின்றார்.

நம் நினைவும், பேச்சும், செயலும் வள்ளுவநெறியினில் நிகழ மனமாசாம் அழுக்கின் இயல்பு (அழுக்காறு - the antonym of அறம் egotism - அகம்பாவம் the root of all evils) இலதாகிக்கழிய, அதுவே ஒழுக்காறுகும். அனைத்தறமுமாகும். இப்படியாக, வையத்து வாழ்வாங்கு வள்ளுவநெறியிலேயே நின்று வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படு(ம்)வான். யான், எனது என்னும் செருக்கு ஆணவத்தினை (அகம்பாவத்தினை) அறுப்பவன் எவனும் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுதற்கும் எட்டுணையும் ஐயமில்லை. தன் உயிர் (the self) தானறப் (selfless ஆக) பெற்ருனை எனையமன்னுயிரெல்லாம் தொழும் - பின்பற்றும்; அதனால் இவ்வுலகமே உய்ந்திடும்.

வள்ளுவ நெறியினைக் கடைப்பிடித்து, நாம் மட்டும் உய்தல் போதாது; பிறர் பலரும் - நம் நாடும் உலகமும் உய்தல் வேண்டும்; அதற்கான அமைப்பினையும் நிறுவ வேண்டும். அதற்கான வேலைகளையும் விரைந்தும் விடாப்பிடியாகவும் செய்துவரல் வேண்டும். தாயுமானார் பாடியதுபோல, நம் பெருந்தகையாரின் கொல்லாமை மட்டுமன்று, அவருடைய புலாலுண்ணுமையும், பழியஞ்சி பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலும் பிறர்க்குதவும், பிறர்க்கென வாழும், என்பும் பிறர்க்குரியார் எனும் தன்மையும் குவலயமெல்லாம் ஓங்கவேண்டும்.

உலகெங்கும் அமைந்திருக்கும் அமைத்திருக்கும் இராமகிருட்டிண கழகம் (Ramakrishna Mission) போன்று, முதற்கண் தமிழகத்திலும், பின் பிற மாநிலங்களிலும், பின் பிற நாடுகளிலும் சிறந்த இடங்களிலெல்லாம் வள்ளுவர் இல்லங்கள் (Thiruvalluvar Mission Houses) அமைத்திடல் வேண்டும்; அவற்றின் நோக்கம் வள்ளுவ நெறியினைப்பரப்புவதாகவும், உலக நலனையும் முன்னேற்றத்தையும் பெருக்குவதாகவும் அமைதல் வேண்டும். அவ்வில்லங்களில் மூத்த அறிவுடையார் - கணவன் மனைவியராகவோ, உடன் பிறந்தாராகவோ இருபாலராக அமர்ந்து அவற்றைச் செயலாலும் பரப்பிவரல் வேண்டும்; அவற்றில் இதுவரை தமிழிலும் பிற மொழிகளிலும் வந்துள்ளதும், இனி வெளியாவதுமான சிறந்த திருக்குறள் நூல்களும் விளக்கங்களும் தமிழ், ஆங்கிலம், ஆரியம் இவற்றில் இதுவரை தோன்றியுள்ளதும், இனித் தோன்றுவதுமான சிறந்த அறநெறி சமய நூல்களும், இலக்கிய இலக்கண விஞ்ஞான நூல்களும் அடங்கிய நூலகம் - படிப்பகம் அமைத்திடல் வேண்டும். அந்த நூலகங்களின் சார்பில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரங்களில் இளைஞர்க்குத் தனியாகவும் வயது வந்தவர்க்கும் முதியோர்க்கும் ஆண் பெண் இரு பாலார்க்குத் தனித்தனியாகவும் திருக்குறள் வகுப்பு நடத்தி வரல்வேண்டும்; ஐந்நூறு பேருக்கு மேல் விரும்பினால் தொல்காப்பிய, சங்க இலக்கிய, திருவாசக சிவஞான போதம் முதலிய வகுப்புகளும் நடத்திவரலாம்; சிறந்த அறிவினைப் பரப்புவதற்காக, சிறந்த நூல்களை வாங்கி வைத்து விற்றும் வரலாம்; சிறந்த தமிழ் ஆங்கில இதழ்களையும் வாசகர்களுக்காகப்படிப்பகத்திற்குச் சேர்த்துவரலாம்; கூடுமானால், வள்ளுவ நெறிபற்றித்திங்கள் இதழ் முதலியன நடத்தியும், துண்டு இதழ்கள் வெளியிட்டும் வரலாம். மாணவ மாணவிகளிடையே திருக்குறள் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கி வழங்கிவரலாம்.

இளைஞர் நிலையங்கள் (Y.M.C.A. and Y.W.C.A. Centres) போன்று, ஆனால் அவற்றிலும் விரிவாக அவ்வில்லங்களை முதியோர்களும் கலந்து கொள்ளக்கூடிய பொழுது போக்கு வசதிகளுடன் அமைத்திடல் வேண்டும்; அவற்றிலோ, அவற்றின் சார்பிலோ சிறந்த சொற்பொழிவுகள் நடத்திவரல் வேண்டும்; மக்கள் முன்னேற்றம், பொதுநலன் பற்றி அறவுரைகளும் அறிவுரைகளும், எவர்க்கும் வழங்கிவரல்வேண்டும்.

தமிழ்ப் பொங்கல் நாளே திருவள்ளுவர் ஆண்டின் முதல் நாளாக இருந்து வருதலாலும், அந்தநாள் அரசாங்க பொதுத்தாபன, தொழிற்சாலை முதலியவற்றின் விடுமுறை நாளாக இருந்துவருவதாலும் சாதி, சமய, பால், வயது முதலிய வேறுபாடெதுவுமின்றித்தமிழர் திருநாளாகப் பலராலும் கொண்டாடப்பட்டு வருவதாலும் அதனையே திருவள்ளுவர் திருநாளாகவும் கொண்டு தமிழர் வாழும் இடமெங்கும் நாடெங்கும், அந்நாளில் பல்லுயிரோம்பலை பட்டினிகிடக்கலை சிறப்பாகச்செய்து அந்த ஆர்வம் பின்னும் தொடர்ந்து நடைபெற்று வரக்கூடியதாகவும் ஆக்கிவரல் வேண்டும்; அந்த நாளில் வள்ளுவநெறிபற்றிச் சிறந்தசொற்பொழிவுகளும் செய்துவரலாம்.

வேண்டுகோள்:

"குறள்நெறி" அன்பர்களுக்கு மட்டும் **திருவள்ளுவர் அறிவு ஆலயம்** என்னும் சிந்தனைச் சிறுநூலைப் பெற ரூபாய் ஒன்றுமட்டும் M.O. செய்தால் எங்கள் செலவிலேயே நூல்அஞ்சலில் தங்களுக்கு ஒரு நூலை அனுப்பித்தருவோம். முகவரி:

ப. இராமசாமி
மனேரா வீடு,
15. கடற்கரைச்சாலை, தூத்துக்குடி-1

ஓட்டார் பின் சென்றொருவன் வாழ்தலின் அங்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று.

மலர் 1 | திருவள்ளுவராண்டு 1995 மாசி 3 (15-2-64) | இதழ் 3

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

உண்மைக் கூட்டரசு நிலைக்கவேண்டுமானால் ..

இந்தியக்கூட்டரசு பதினான்கு மொழிகளையும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொண்டிருப்பதாக அரசியல் சட்டம் கூறுகின்றது. எல்லா மாநிலங்களும் இணைந்துள்ள கூட்டரசில் எல்லா மாநில மொழிகட்கும் சமஉரிமையும் வாய்ப்பும் அளித்தல் வேண்டும். கூட்டரசுப் பாராளுமன்றில் அவைகளைப் பயன் படுத்துவதற்குத் தடை இருத்தலாகாது. கூட்டரசுப் பாராளுமன்றில் தேசிய மொழிகள் என ஒப்புக்கொள்ளப்பட்டவற்றுள், எதில் வேண்டுமானாலும் யாரும் உரை நிகழ்த்தலாம் எனும் உரிமை ஒப்புக்கொள்ளப்படல் வேண்டும். இவ்வுரிமை மறுக்கப்பட்டால் கூட்டரசு என்பது பொருளற்று விடும்.

இத்தியக் கூட்டரசுப் பாராளுமன்றில் குடியரசுத் தலைவர் இந்தியிலோ ஆங்கிலத்திலோதான் உரைநிகழ்த்த இயலும். அவருடைய அன்னைமொழியாம் தெலுங்கில் கூட உரை நிகழ்த்த உரிமையில்லையென உரைத்துவிட்டனர். ஆங்கிலமோ அயல்மொழி; இன்னும் சில ஆண்டுகளில் அகன்றுவிடும். பின்னர் இந்தி ஒன்றில்தான் அங்கு உரையாடல்முடியும் என்ற நிலை ஏற்படுகின்றது. அங்ஙனமாயின் ஏனைய தேசிய மொழிகளின் நிலைஎன்ன? கூட்டரசுப் பாராளுமன்றில் கூறும் உரிமையில்லாத மொழியினர் கூடிவாழ்வது எற்றுக்கு என நினைப்பதில் தவறு என்ன? மொழியுரிமைக்காக இன்று திராவிட முன்னேற்றக்கழகத்தினர் கிளர்ச்சி செய்வது பொருளற்றது எனக் கூறுவது பொருந்தாது எனப் புலப்படுகின்றதே.

சின்னச்சாமி எனும் இளஞ்செம்மல் செந்தமிழ் காக்கச் செந்தி மூழ்கிச் செத்துமுடிந்ததும் அறியாமையால் நிகழ்ந்தது எனப்புறக்கணிப்பதற்கு இல்லையன்றே?

பரதகண்டத்தில் எல்லா மாநிலத்தவரும் கூடி வாழ வேண்டும்; கூடிவாழும் கூட்டரசு என்றும் நிலைத்திருக்க மேண்டுமென்றால், அக்கூட்டரசுமன்றில் எல்லா மாநில மொழிகட்கும் சம உரிமை அளிக்கப்படல் வேண்டும். ஒரு மொழிக்கே முதன்மையளித்து ஏனையவற்றிற்கு அதன் பின்னிற்கும் தாழ்நிலை கொடுப்பின், அம்மொழி கட்கு உரியாரிடம் ஒற்றுமையுணர்வு தோன்றுவது அரிதாகிவிடும். கூட்டரசு ஆட்சி மொழியாம் இந்தியே உயர்ந்தது; ஏனைய தாழ்ந்தன எனும் நிலை எளிதில் ஏற்பட்டுவிடும். உயர்வும் தாழ்வும் ஒற்றுமையுறுவது எங்ஙனம்?

ஆதலின் எல்லா மொழியாளரும் ஒன்று கூடி ஒற்றுமையுணர்வுடன் வாழவேண்டுமென்றால், எல்லாத் தேசிய மொழிகட்கும் ஆட்சிமன்றில் சமநிலை அளிக்கப்படவேண்டும். பாரதப் பாராளுமன்றில் அனைத்துத் தேசிய மொழிகளையும் விரும்புவோர் விரும்புங்கால் பயன் படுத்துவதற்குத்தடையிருத்தல் கூடாது. ஒற்றுமையின் பெயரால் உரிமையை யிழக்கச் செய்வது உண்மைக்கூட்டரசை நிலைக்கச் செய்யாது என்பதை உணர்ந்து ஒருமைப்பாடு வேண்டுவோர் செயல்புரிவார்களாக.

அரசுப்பணிக்குத் தமிழ்ப்புலவர்கள்

தமிழ்நாட்டு அரசு அலுவல்களில் தமிழ்ப் புலவரும் பணிபுரியலாம் எனும் செய்தி வெளிவந்துள்ளது. இச்செய்தி வெளிநாட்டார்க்கு நகைப்பை விளைவிக்கும். ஆங்கில நாட்டில் ஆங்கிலத்தில் புலமையுற்றோரும், ஏனைய நாடுகளிலும் அவ்வந்நாட்டு மொழிகளிலும் புலமைபெற்றோரே அலுவல் துறைகளில் முதன்மையிடம் பெறுகின்றனர். தமிழ்நாட்டிலும், தமிழ் ஆட்சிமொழியானபிறகு தமிழ்ப்புலமை பெற்றோரே தமிழ்நாட்டு அரசு அலுவல் துறைகளில் அமர்த்தப்படல்வேண்டும். ஆனால் இன்னும் தமிழ்ப்புலமைப் பட்டம் பெற்றோர்க்கு உரியஇடம் அளிக்கப்படவில்லை தமிழ்ப் புலமையுற்றோர் பணிதேடிச் செல்லுங்கால் ஆங்கிலப் புலமை பெற்றிருந்தும், அதனுடன் தமிழ்ப்புலமை பெற்றிருப்பதால் அதற்காக இகழப்படுகின்றனராம், என்னே கொடுமை! இன்று தமிழ்மொழி வாயிலாகக் கல்வி கற்க மாணவர்கள் முன்வராத காரணமும் தமிழ்ப் புலமையுடையோரை இகழ்ந்து ஆங்கில அறிவு உடையோரைப் போற்றுவதுதான். ஆதலின் தமிழக அரசு, **"தமிழ் வழியாகப் பயின்றுள்ளோர்க்கும் தமிழ்ப் புலமையுடையோர்க்கும் முதலிடம் அளிக்கப் படும்"** என அறிவித்தாலன்றி தமிழ் வழியாகப் பயில யாரும் முன்வரார். ஆகவே, தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டுள்ள தமிழகஅரசுஉடனடியாக இதனை விளம்பரப்படுத்தி அறிவித்தால்போதும். தமிழ் வழியாகப் பயிலவும் தமிழ்ப்புலமைப் பட்டம் பெறவும், ஓடோடிவருவர். அரசு தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தின் பொருட்டுச் செலவுழிக்கும் தொகையும் மிஞ்சும். மாணவர்களே தமிழை விரும்பிலர் என்ற குறையும் நீங்கும். தமிழ்ப்புலவர்களும் பணிபுரியலாம் என்ற விதியும் வேண்டியதின்று.

எனவே, தமிழையாட்சி மொழியாகக் கொண்டுள்ள தமிழகஅரசில் தமிழ்ப்புலமையுடையோர்க்கே முதலிடம் என்பதனைத் திட்டவட்டமாக உடனே அறிவிக்கவேண்டுகின்றோம். இத்துறையில் ஓரளவு ஆர்வம் காட்டும் தமிழகஅரசுக்கு இஃது இயலாதது ஒன்றன்று.

இனிய தமிழ்ச் சொல்லிருக்க எதற்கு அயல் மொழிக் கலப்பு ?

நம்மைச் சுற்றி

மாலைக் கல்லூரி

"யாதானும் நாடாமல், ஊராமல்; என்னொருவன் சாம்துணையும் கல்லாதவாறு" என வினவினர் பொய்யா மொழியார். ஆகவே கல்வி பெறுவதற்குக் காலவரையறை இல்லையென்பது புலனுகின்றது. வேளை தவறாது உண்ணுதல் போன்று நாள் தவறாது நல்ல நூல்களைக் கற்றல்வேண்டும். கற்பது நல்வாழ்வுக்குத் துணை புரியும் என்று கருதினர் அன்று. ஆனல் இன்றோ கற்பது பதவிகளைப் பெறுவதற்காகவே என்பது நாடறிந்த உண்மையாகும். கற்றல் மட்டும் போதாது; அதன் அடையாளமாகப் பல்கலைக் கழகப் பட்டமும் வேண்டும். ஆகவே இன்று கல்வியின் குறிக்கோள், பட்டங்களைப்பெற்று அரசு நிலையங்களில் பதவிகளில் அமர்வது என்பதாகி விட்டது

கல்லூரிகளில் சென்று படிப்பது என்பது செல்வர் கட்கு உரிய ஒன்றாகவே இன்று உள்ளது. ஏழைகள் மிகுந்த நம் நாட்டில் கல்லூரிப் படிப்பின்றியே வாழ்வுத் துறையில் ஈடுபடுபவர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மேலை நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஊதியத்திற்காகவும பணிபுரியும்போது படித்துப் பட்டம் பெறவும், படித்துக்கொண்டிருக்கும்போதே பணிபுரிந்து ஊதியம் பெறவும் வசதிகள் உள்ளன. (Earn while you learn and Learn while you earn) இந்நாட்டில் அவ்வசதிகள் இல்லாமலிருப்பதால் தான் கற்றுப் பட்டம் பெற்றவர் தொகை பெருகாமலிருக்கின்றது. கற்றவர் தொகை பெருகுவதற்கு ஒய்வுநேரங்களில் படித்துப் பட்டம்பெறுவதற்கும் வசதிகள் உண்டாதல் வேண்டும். கல்லூரிகளில் பயிலாமல் தனியாகப் பயின்றால் கல்விநிலை உயர்ச்சி பெறுது என்று கருதி சென்னைப் பல்கலைக் கழகம், ஆசிரியரல்லாப் பிறர் தனியாகப் பல்கலைக் கழகத் தேர்வு எழுதுவதற்கு உரிமை அளியாது இருந்தது. வட இந்தியப் பல்கலைக் கழகங்களில் பல, எந்நிலையில் உள்ளோரும் தனியாகத் தேர்வு எழுதிப் பட்டம் பெறலாம்என்று விதி வகுத்திருந்தும் சென்னைப் பல்கலைக் கழகம் அவ்வாறு செய்யாமலிருந்தது கல்வி வளர்ச்சியில் பெருங் குறையாகவே கருதப்பட்டது.

இன்று மாநில அரசின் வற்புறுத்தலுக்கு இணங்க சென்னைப் பல்கலைக்கழகம் மாலைக் கல்லூரிகள் தொடங்கவும், அவைகளில் பயில்வோர்க்குப் பட்டமளிக்கவும் இசைவு தந்துள்ளமை பாராட்டத்தக்கது ஆகும், ஆனல் இத்திட்டத்தினலும் பயன் மிகுதியாக விளையாதுபோல் தோன்றுகின்றது. இப்பொழுதுள்ள கல்லூரிகளே மாலைக் கல்லூரிகளைத் தொடங்கலாம் என்றும், அவைகளுக்குரிய ஆசிரியர்கள் வேறுக நியமிக்கப்படவேண்டும் என்றும், இவைகளில் பயில்வோர் (மூன்றாண்டுக்குப்பதிலாக) நான்காண்டு பயிலவேண்டும் என்றும் இருப்பது மாலைக் கல்லூரியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் இடையூறாகும். ஆகவே ஒய்வு நேரத்தில் பயின்று பல்கலைக்கழகத்தேர்வுகள் எழுதுவதற்கு வசதியளிக்கவேண்டுமேயன்றி குறிப்பிட்டகல்லூரிகளில் குறிப்பிட்ட ஆண்டுகள் பயிலவேண்டும் என்று விதிப்பது கூடாது. எழுத்துத் தேர்வுகளினல் மதிப்பிடும் திட்டம் இருக்கும்போது கல்வித்தரம் குறைந்துவிடும் என்று அஞ்சவேண்டிய தில்லை. தேர்வுகள் கல்லூரிகளில் பயில்வோர்க்கும் தனியாகப் பயில்வோர்க்கும் தனித் தனியாக இரா. ஆதலின் அவர்கள் கற்கும் வழிமுறைகளுக்குக் கட்டுப்பாடு விதியாமல் தகுதியுடையோர் தனியாகவும் ஆசிரியர்களைப் போன்று தேர்வு எழுதலாம் என்று விதி ஏற்படுத்துவதுதான் கற்றோரைப் பெருக்கத் துணைபுரியும். தனியாகப் பயில்வோர்க்கு மாலைக் கல்லூரிகள் துணை புரியுமாறு செய்யலாமேயன்றி மாலைக் கல்லூரிகளில் பயின்றுதான் பட்டம் பெற வேண்டுமென்பது பட்டம் பெற்றோர் தொகையைப் பெருகச்செய்யாது என்று கருதுகின்றோம்.

இலங்கையில் தமிழர்

இலங்கை, பழந்தமிழ் நாடாம் குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகும். தொல்காப்பியர் காலத்தில் இன்றைய இலங்கை, தமிழகத்தின் ஒருபகுதியாகவே இருந்திருக்க வேண்டும் என்பது எமது கருத்து. முற்றிலும் தமிழ் வழங்கிய - தமிழர்க்குரிய பகுதியாக இருந்த இலங்கையில் வங்காளத்திலிருந்து கடல் வழியாகச்சென்று குடியேறிய இனத்தவர் பெருகி அங்கேயுள்ள பழங்குடி மக்களாம் தமிழரை அல்லல்படுத்தி அடிமையாக்க முயல்வதும் அவர்கள் மொழியை ஆட்சிமனையிலிருந்து அகற்றியதும் அறநெறிக்கு அப்பாற்பட்டனவாம் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. தமிழர்கள் தம் உரிமையிழந்துவரும்போது நாம் வாளாயிருத்தல் மொழிப்பற்றும் இனப்பற்றும்அற்றதொன்றுதல்மட்டுமன்றி இரக்கமற்ற ஒன்றுகவும் கருதப்படும் நமக்குத் தொடர்பற்ற மிகத் தொலைவில் உள்ள நாடுகளில் பூசல்கள் ஏற்பட்ட காலக்களில்-இரக்கம் மேலிட்டு உதவச் சென்றநாம், அண்மையில் நமக்குத் தொடர்புடையார்க்கு ஏற்பட்டுள்ள நலிவைப்போக்க முயலாமல் இருத்தல் நன்றே? முறையா? ஆகவே தமிழக அரசு இலங்கைத் தமிழர் துயர்போக்க, இன்றே. இன்னே, முடிதற்றி மூன்றுற வேண்டுமென மனங்கரைந்து வேண்டுகின்றோம்.

நெடுங்கதை இலக்கியம் ... ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுங்கதை தூண்டும் உணர்வு யாவருக்கும் பொதுவானது. இவ்வுணர்வை விளக்கும் நெடுங்கதை நல்ல வகையில் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு சொல்லும் கற்பனைச் செறிவும். கருத்தாழமும் கொண்டு விளங்கவேண்டும். இதனுல் பாத்திரங்களின் நிலையை நன்கு விளக்கமுடிகிறது. நெடுங்கதையின் அடிப்படைத் தத்துவத்தையும் நன்குணர்த்த வாய்ப்பேற்படுகிறது. இந்த நிலையில் பார்க்கும்போது, நெடுங்கதை கவிதை போன்று தோன்றுகிறது. ஆசிரியன் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் பல்லாயிரக்கணக்கான் வாசகர்கள் பல துன்வங்களை அனுபவிக்கவேண்டி வருகிறது. ஆபாசமான சொற்கள் ஆபாசத்தைத்தூண்டும் ஆற்றல் வாய்ந்தனவாய் விளங்குகின்றன. உண்மையற்ற மொழிகள் மக்களை மயக்கி போலித்தனத்தை வளர்க்க வழி கோலுகிறது இந்த ஆபத்தை அறியும் ஆசிரியன் மக்களின் பண்பாட்டை உண்மையில் வளர்த்தவனுகிறன். அவன் இலக்கியம் மக்கள் இலக்கியமாகிறது. அதுதான் என்றும் நின்று நிலவும் என்று திண்மையாகக் கூறலாம்.

பர்மா முதலிய வெளிநாடுகளில்
இசையரங்கு நிகழ்த்திப் புகழ்பெற்றுள்ள
திருமதி பவானி வேங்கடராமன்
26-B, திருநகர்.
மதுரை - 6.

குறள்நெறியில் ஒழுகுவோம் - உலகக் கூட்டுறவு கொள்ளுவோம்

செங்கனி நாடு சென்று வந்தேன்!

(பொன்வண்டு)

உலகத்தின் பிற நாடுகளெல்லாம் கண்டு வியப்படையும் படியும் ஓரளவு பொருமைப்படும்படியாகவும் அரசாட்சி செய்து வரும் செங்கனி (செஞ்சீனா) நாட்டுக்குச் சென்று வரக் கூடிய நல்வாய்ப்பு தமிழகத்து மக்களிலேயே முதலாவதாக எனக்குத் தான் கிடைத்தது. அதிலே நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அந்த நாட்டின் நடைமுறைகள் அத்தனையுமே புதுமை! உடையிலே புதுமை, உணவிலே புதுமை, பேச்சிலே புதுமை; பெண்கள் போக்கிலே புதுமை... இன்னும் எல்லாமே புதுமை!

இப்புதுமைகளைப் பற்றி ஓரளவு தான் நீங்களெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள்; கண்டிருக்க முடியாது. நேரே சென்று வந்த என்னை நண்பர்களெல்லாம் கூடி வற்புறுத்தி இந்தச் 'செலவு' (பிரயாண)க் கட்டுரை எழுதச் செய்துவிட்டார்கள். நான் எழுதும் உண்மைகளிற் சிலவற்றை வெளியிடக் கூடாதென்று அந்த நாட்டு அரசு எனக்குத்தடை பிறப்பித்து அதற்கொரு கட்டளையையும் கொடுத்தனுப்பியுள்ளது. இருப்பினும், நமது நாட்டு அரசியலார் பல பொருளாதார நுட்பங்கள் எனது கட்டுரை மூலமாகக் கிடைக்கும் என்று கருதிச் செங்கனி நாட்டினரின் தடையை மீற உரிமை தந்திருக்கிறார்கள்.

செங்கனி நாட்டைப்பற்றி நீங்கள் அறிந்த தெல்லாம் அந்த நாட்டிலிருந்து பல வெறுக்கத்தக்க பால் உணர்ச்சியைத்தூண்டிவிடும் திரைப் படங்களும். புத்தகங்களும், ஏடுகளும் வெளியாகின்றன என்று தானே? நம்நாட்டுப் புலவர்களும் அறிஞர்களும் கூடிப் பற்பலகூட்டங்களிலும் பேரவைகளிலும் செங்கனி நாட்டு இறக்குமதியைத் தடை செய்யுமாறு கூக்குரல் போட்டு நம் அரசும் அதனை முற்றிலும் தடை செய்திருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். இருந்தும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தடை செய்யப்பட்ட அந்நாட்டு 'இலக்கியங்கள்' இங்கும் புகுந்து நம் இளைஞர்களைக் கவர்ந்திருப்பதை நான் சொல்லாமலே அறிவீர்கள்.

பிறருக்கெல்லாம் அனுமதி வழங்காத அந்தத் தனி நாட்டுக்கு நான் செல்ல நேர்ந்ததே தனிக்கதை. என்னைப் பற்றி நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஒரு வேளை மறந்தவர்களுக்குக் கொஞ்சம் நினைவூட்டினாற்போதும். எளிதில் நினைவுபடுத்திக் கொள்வீர்கள். "காடுறங்கியும் கண்ணுறங்க வில்லை", "கழுதை மேலேறி வந்த கட்டழகன்", "சப்பை மூக்கும் தொப்பை வயிறும்" "மூட்டிய தீ காட்டிய வழி" முதலாக இருபது திரைப்படங்களுக்குமேல் கதைத் தலைவனுக்குத் துணையாக வந்து நகைச்சுவை நல்கிய இந்தப் 'பொன் வண்டை'யும் தமிழகம் மறக்குமா? நான் ஒவ்வொரு படத்திலும் குதித்த குதிப்பும் ஆடிய ஆட்டமும் பேசிய கோணற்பேச்சும் ..காருள்ள வரை கடல் நீருள்ளவரை நிலைத்து நிற்கும் என்று காலஞ்சென்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் என் படத்தைத் திறந்து வைத்துப் பேசியதைத்தான் உங்களால் மறக்க முடியுமா?

என்னைப்பற்றி மிகவும் தெரிந்த உங்களிடமே என்னைப் பற்றி விரித்துக் கூறத் தொடங்கிவிட்டேனே, பத்து ஆண்டுகளுக்கு முன் படவுலக வாய்ப்பு எனக்கில்லாமல் போனதும் நான் எனது சொந்த ஊரான முக்காலிப்பட்டியில் எஞ்சியிருந்த புன்செய் நிலங்களிற் பயிரிட்டு வாழ்ந்து வந்தேன் என்பதை வேண்டுமானால் நீங்கள் தெரிந்திருக்க மாட்டீர்கள். சொல்ல வேண்டியது முதன்மையும் கூட.

மூன்றாண்டுகளுக்கு முன்னால் இப்படித்தான் ஒருநாள் நான் கடலைக் காட்டில், களை எடுத்துக்கொண்டிருந்த கழனிப் பெண்களை மேற்பார்வை செய்துகொண்டிருந்தபொழுது. திடீரென ஒரு விமானம் திசைதடுமாறி ஏதோ ஒரு கோளாறினால் அங்குமிங்கும் சுழன்று இறுதியில் பக்கத்திலிருந்த பருத்திக் காட்டில் போய் விழுந்தது. உடனே நான் ஓடோடிச் சென்று பார்த்தேன். அங்கே ஒரே ஒரு பெண் மட்டும் வலுத்த காயங்களுடன் வெளியே கிடக்கக்கண்டேன். பிறரெல்லாம் செய்தித் தாள்களில் இடம்பெற்று மேலுலகடைந்து விட்டனர். பெண்ணென்றால் பேயும் இரங்குமல்லவா? (நான் பேயல்ல) இரக்கம் கொண்டேன்.

காயம்பட்ட பெண்ணைப் பார்த்தேன். அவளது உடையமைப்பைப் பார்த்ததும், நான் முன்பு நடிகனாயிருந்தபோது 'கள்ளக் கடத்தல்' மூலமாக வாங்கிப்பார்த்திருந்த செங்கனி நாட்டுப் படங்களில் இருந்த உடையமைப்பு எனக்கு நினைவுக்கு வந்தது. அவளை எடுத்துக்கொண்டு போய் என் வீட்டில் வைத்துக் காயங்களை ஆற்றினேன். விமான மீட்பு முயற்சியில் ஈடுபட்ட அரசியற் காவலர்களிடம் சொல்லாமல் மறைத்துவிட்டேன்.

செங்கனி நாட்டு மங்கை முற்றிலும் தேறுவதற்கு மூன்று மாதங்கள் பிடித்தன. மூன்று மாதங்களும் அவள் அருகில் இருந்து பணிவிடை செய்தேன். அவள் உள்ளம் குளிர்ந்து போய்விட்டது. மெல்ல மெல்ல என்னிடம் பேசத்தொடங்கினாள், அவர்கள் நாட்டுமொழியில். எப்படியோ ஒருவாறு அவள் நம்மொழியையும் நான் அவர்கள் மொழியையும் கொஞ்சங் கொஞ்சமாக விளங்கிக்கொண்டோம். மேலும் மூன்று மாதங்களுக்குள் அவளும்நானும் அந்தந்தமொழிகளில் 'அரைப்புலமை' யுடையவர்களானோம்.

செங்கனி நாட்டு நங்கையின் பெயர் 'மூங்கோன்'என்பது, அந்த நாட்டில் பொறுப்பான ஓர் அரசு அலுவலில் உள்ளவளாம். பிரெஞ்சுநாட்டுத் தலைநகருக்குச் சென்று தங்கள் நாட்டுத் திரைப்படங்கள் சிலவற்றைத் திரையிட அனுமதிபெற்று வருவதற்காக விமானத்திற் சென்றுகொண்டிருந்தாளாம் படமெல்லாம் எரிந்து பாழாயிற்று. இனி அவள் நாடு திரும்பவேண்டியதுதான்.

தனது உயிரைக் காத்ததற்கு நன்றிக்கடனாக என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள் 'மூங்கோன்'. நான் முன்பு நடித்திருந்த சில படங்களைத் திரையிட்டுப் பார்த்தாள். திடீரென ஒரு குதி குதித்தாள். என் நடிப்பை அவர்கள் நாட்டில் பலர் மிகவும் விரும்பிப் பலமுறை பார்த்து மகிழ்ந்ததாகக் கூறி என்னைத் தம் நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தாள்.

(தொடரும்)

விரைவில் எதிர்பாருங்கள்

ஆங்கிலத்தில்

தொல்காப்பியம்

(1—2—64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவரும் அரசியலும்

—டாக்டர் பா. நடராசன், எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.

அரசு அமைப்பும் இயல்பும்:

வள்ளுவர் அரசின் உருவத்தைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. அதன் உட்பொருளைப்பற்றியே எண்ணலானார். அரச அமைப்பைவிட ஆட்சி நலத்தையே ஆய்கின்றார். எனெனில் எந்த உருவத்தில் அரசிருந்தாலும் மக்கள் பொருளாதார வாழ்வு சிறப்பதற்கு, அந்த அரசின்பால் சிற்சில தகுதிகள் இருக்கவேண்டும். அத் தகுதிகள் இருக்குமானால் மக்களுக்கு இறுதியாகவேண்டும் இன்பவாழ்வு வந்தெய்தும் என்பதே அவர் கோட்பாடாக இருந்தது எனக் கொள்ளவேண்டியிருக்கிறது.

எந்த அரசியல் அமைப்பாயினும் என்ன, ஆட்சி ஆதிக்கம் ஒரு தலைவன் கையில் இறுதியாகத் திரளும் வகையில்தானே இருக்கிறது. எனவே அவனை நல்லாட்சிக்கு ஏற்றவனாய் எவ்வாறு அமைப்பது? இதுவே வள்ளுவர் கவலை. அலக்சாண்டர் போப் என்ற ஆங்கிலக் கவிஞர் பாடுவார்:

"அரசியல் உருவகம்பற்றி அறிவிலார் இகலட்டும்
நல்லாட்சி வழங்கும் அரசியலே நல்ல அமைப்பாகும்".
For forms of Government let fools contest
That which is administered best is best is best.

அரசும் ஊழும் :

அரசியல் அமைப்பின் உருவம்பற்றிக்கருதாது உட்பொருள் பற்றி வள்ளுவர் கருதியது எதனாலென்றால் இறுதியில் ஆட்சித்தலைமையும் அதனைச் சார்ந்த அதிகாரமும் எந்த உருவமாயினும் ஒருவனிடத்தே அமைந்தே ஆகவேண்டியிருக்கவும் அவ்வாறு அமைவதும் ஊழின்பாற்பட்டதாக இருக்கின்றது. ஊழோ தடுத்தற்கரியதொன்று. ஆகவே ஊழ்வலியால் வரும் ஆட்சியை எங்ஙனம் நல்லாட்சியாக மாற்றுவது என்பதுபற்றித்தான் கூறமுடியுமேயன்றி அரசியல் உருவத்தைப்பற்றிக் கூறுவதால் பயன் என்ன?

அறத்துப்பால் கூறிமுடித்த வள்ளுவர் அடுத்து உடனேயே அரசியல்நெறி கூறும் பொருட்பால் கூறப்புகுமுன் இடையே ஒரு கணம் சிந்தனை செய்கிறார். இதுகாறும் கூறிய அறத்தால் உலக இன்பத்திற்குத் துணைக் காரணமாகிய நல்ல அரசியல் அமைப்பு இயல்பாய் ஏற்படுவதாய்க் காணேமே! எவ்வெவர் கையிலோ ஆட்சித்திறன் அமைந்து வருகிறதே, அதன் காரணம் என்ன? 'ஊழ்' என ஒன்றுள்ளது. அதன் வலியாலேயே அரசியல் தலைமையும் அதனால் வரும் பொருளாதார முன்னேற்றமும் உளவாகும் என்று தோன்றுகிறது. அறம் செய்வார் வேண்டுமானால் தெள்ளியராதல் கூடும். திரு அல்லது ஆட்சித் தலைமை பெறும் வாய்ப்பு வேறெருகாரணத்தால் வருகின்றது, 'அதுவேஊழ்' என்பதுபோல்.

"இருவேறு உலகத் தியற்கை, திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று கூறுவாராயினர். (அரசியல் செல்வத்தைக் கம்பரும், அறம்நிரம்பிய அருளுடைய அருந்தவர்க்கேனும் எனும் கவிதையில்"பெறலரும் திரு" எனச் சுட்டுகின்றார்)

தமிழே!

(கவிஞர் தே. ப. பெருமாள்)

நிறைவினில் மலர்ந்தொளிரும் தமிழே—என்
நெஞ்சத்தில் அமுதாகும் தமிழே
உறவினில் உயிரான தமிழே—என்
உணர்வினில் கவிபேசும் தமிழே!

ஒழுக்கத்தின் மணம்வீசும் தமிழே—வீர
உருவத்தில் கூத்தாடும் தமிழே
விழுப்பத்தின் நலமுரைக்கும் தமிழே—நீதி
மேவியே கோலோச்சும் தமிழே!

நிலவின் குளிர்பெற்ற தமிழே—கதிர்
நிரப்பும் ஒளிபெற்ற தமிழே
மலரின் மெதுவேற்ற தமிழே—தேன்
வழங்கும் சுவைகொண்ட தமிழே!

மின்னின் விசைகொண்ட தமிழே—கடல்
விரிக்கும் திரைமுழக்கத் தமிழே
கன்னி நிறைபொலியுந் தமிழே—எங்கள்
கவிஞர் நிதியான தமிழே!

சங்கப் புலவர்களின் தமிழே—வையம்
தழைக்கக் குறள்தந்த தமிழே
துங்க மணிச்சிலம்பின் தமிழே—கம்பன்
சோதி மகுடமொளிர் தமிழே!

நான்பேச மெய்குளிரும் தமிழே—என்
நாவெல்லாம் இத்திக்கும் தமிழே
வான்தேசு கொட்டுகின்ற தமிழே—தென்றல்
வாசம் அனுங்குவருந் தமிழே!

அன்புக்கு வித்தூன்றும் தமிழே—தெய்வ
அருளுக்கு வழிகாட்டுந் தமிழே
துன்பமாம் முகிலொழிக்கும் தமிழே—வாழ்வைச்
சுவையாக்கும் தெய்விகத் தமிழே!

அகிலமெல்லாம் ஒன்றென்னும் தமிழே—வாழ்வில்
அனைவர்நலம் விழைகின்ற தமிழே
பகையொழித்தே யமைதிதரும் தமிழே—இந்தப்
பாரெல்லாம் போற்றுகின்ற தமிழே!

யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில்எழுந்த அவாவேயாகும். தமிழ் மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினாரிலர். அது குறித்து எனக்குள்ள வருத்தம் அளவற்றது.

— காந்தியடிகள்

அவ்வாறுயின் அறத்துக்கும் ஊழுக்கும் தொடர்பில்லையா? என்ற கேள்வி எழுகின்றது. கண்கூடான நேரடியான தொடர்பைக் காணவியலாமலிருக்கலாம். ஆனால் 'ஊழ்' எனப்படுவது, இருவினையின் பயன் செய்தவனையே சென்றடையும் எனப்படும் ஒரு தவிர்க்கலாகாத நியதியேயன்றி வேறுகாது. எனவேதான் வள்ளுவர் கருத்தை யுணர்ந்த பரிமேலழகரும் 'ஊழ்' என்பது "மேற் கூறிய அறத்தோடு இயைபு உடைமையானும்" என்று சுட்டிச்சொல்வரானார்.

இங்கு எடுத்துக்கொண்ட பொருளுக்குச் சிந்தனை செய்யவேண்டுவது இதுவே. ஆட்சிநலம் எவ்வகையான அரசியலமைப்பிலும் ஒருவனை எங்ஙனமும் சார்கின்றது. அது ஊழான்வருவது. அவ்வாறு ஊழான் வந்த ஆட்சி நலத்தால் உலகு இன்பம் அடைய அவன் பெறவேண்டும் தகுதிகள் யாவை என்பதேதான். (தொடரும்)

'அன்னை' காபியை
அருந்துங்கள்

பட்டம் உறுதியாயிற்று

— கண. சிற்சபேசன் எம். ஏ.

அப்பகுதி மக்கள் அவனைப் பொதுவாகப் பைத்தியம் என அழைப்பார்கள். கல்வியறிவுடையோர் சிலர் விஞ்ஞானி என்பார்கள். அறவோர் சிலர் "அவன்தான் சிறந்த மனிதன்: தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பவன்" என்பார்கள் "உள்ளே உள்ளதை மறைக்க வடிக்கும் இவன் காரியக் கிறுக்கு" என்பார்கள். கற்றறிந்த சில இளைஞர்கள், இவை எல்லாம் அவனுக்குத் தெரியும். ஆனால் இதைப்பற்றி அவன் கவலைப்படுவதுமில்லை. அவர்களைத் திருத்த முனைவதுமில்லை. தனியே வாழும் அவனது அறையில் காலை 6 மணிக்குத் தட்டுப் பொறி இயங்கத் தொடங்கும். ஒரு மணி நேரத்திற்குப் பின் மின்சார அடுப்பு இயங்கும். அரிசியைக் களைந்து ஒரு பாத்திரத்திலிட்டு அதை அடுப்பிலேற்றி அது கொஞ்சம் வெந்ததும் பிற காய்கறித் துண்டுகளை நறுக்கி அதனோடு சேர்த்து வேகவைத்த பொங்கலே நாள்தோறும் அவனுடைய உணவு.

காலை 8 மணிக்கு அவன் வீட்டுச் சிறு தோட்டத்திற்குச் செல்வான். முயல்கள் தாவித் தாவி ஓடிவந்து அவன் கால்களை மெல்லக் கடிக்கும். பின்னர் அவன் மேற்கொள்ளும் செயல்கள்தான் அவனை உலகம் பைத்தியம் எனப் பழிக்கக் காரணமானவை. மெல்லச் செல்வான். வலைகளாலான கூட்டின் சிறு கதவைத்திறப்பான்; கூர்ந்து நோக்குவான். அவ்வளவே திடுமென இடக்கை விரல்களிரண்டால் கூண்டிலிருந்த பாம்புகளில் ஒன்றன் தலையை இடுக்கி போலப் பற்றிக்கொள்வான். மற்ற பாம்புகள் அஞ்சியோடி மூலையில் சுருட்டிக்கொள்ளும். பிடிபட்ட பாம்பு தன் உடலையும் வாலையும் இவனது கையைச் சுற்றிச் சுற்றிக் கொள்ளும். அதைப் பிடித்தவாறே தன் ஆய்வறையில் புகுவான். வண்ணக் கண்ணாடிக்குப்பியில் அதை விடுவான். பிறகு ஆராய்ச்சி தொடங்கும்.

இரண்டு மணி நேரத்திற்குப்பிறகு வெளியே வருவான். ஏழைக் குறவர் கூட்டமே அவனைக்காணக்காத்து நிற்கும். அவரவர் தமக்குக் கிடைத்த ஊர்வன, பறப்பன முதலியவற்றைச் சுமந்தவாறு, மலைவளங்காணச் சென்ற சேரனின் செவ்விகாணக் காத்துநின்ற குறவர்போல, நிற்பர். அவ்வளவையும் விலை கொடுத்து வாங்கிக் கொள்வான்.

இன்றைக்கும் அவ்வாறுதான் ஒரு குறவன்வந்தான். பாம்பைக் கொடுத்து விட்டுப் பலகாலும் பழகிய அன்புடைய அவன் "சாமி இது ரொம்பப் பொல்லாதுங்க. குறளியுங்கூட பார்த்தா சும்மா கிடக்கும். தொட்டாலும் சும்மா கிடக்கும். ஆனால் டபார்ன்னு போட்டுடுங்க ... கவனமா இருங்க... கருப்பணசாமி அணை இருக்காரு" எனக்கூறிவிட்டுச் சென்றான். விஞ்ஞானியின் அனுபவ அறிவையே ஏளனம் செய்வது போலிருந்த சொற்கள் அந்த ஏழைக் குறவனின் அன்பையும் அருளையும்கொட்டி நின்றன. புதிய விரியன் புத்தறை புகுந்தான். அவனுக்குப் பாலும் உணவும் கிடைத்தன. உண்டு கொழுத்திருந்த அவன் இறந்ததுபோலவே கூட்டிற்குள் கிடந்தான். விஞ்ஞானி கவனக் குறைவாகப் பிடிக்கவே கைகளில் கடித்துவிட்டான். ஆனால் அவனை கைப்பிடியைத் தளர்த்தாமல் மீண்டும் அதைக் கூண்டிற்குள் அடைத்து விட்டு வேகமாக வீதியை நோக்கி ஓடினான். வாயிற்படியில் விழுந்துவிட்டான்.

பைத்தியத்தைப் பாம்பு கடித்தது என்பாரும், இதில் வியப்பென்ன என்பாரும், பைத்தியம் பாம்பைக் கடித்துவிட்டது என்பாரும் எதற்கும் முடிவுண்டு என்பாரும், பாவம் என்றுணர்வாரும். வருந்திக் கண்ணீர் வடித்த ஏழைக் குறவரும் மலிந்தனர்.

மருத்துவ மனையில் தேறித்தெளிந்த விஞ்ஞானி நடக்கும் உரன்பெற்ற உடனேயே பணிப்பெண்ணை ஏமாற்றிவிட்டு எழுந்து ஓடினான். சிறிது நேரத்திற்குள் மருத்துவ உதவி ஊர்தி பின் தொடர்ந்தது அவன் வீட்டிற்கு முன் பெருங்கூட்டம். உள்ளே சென்ற பலரும் அவனது செய்கைகளைக் கண்டு வியந்து நின்றனர். விஞ்ஞானி பாம்பு அறைக்கு வெளியே நின்றவாறு பலமணித்துளிகள் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்' மெல்ல அக்கூண்டின் கதவைத் திறந்தான். அவன் அந்த விரியனைப் பிடிக்கமுயல்வதும் அது அகப்படாதவாறு ஓடுவதும் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. வேகமாக ஓடிவந்த பணிப்பெண் தடாலென பாம்பறைக் கதவைச் சாற்றிவிட்டு அவனை அழைத்துவந்தாள். அவளைப் பார்த்து அவன் கேட்டான். "நீ பார்த்தாயா அது எவ்வளவு அழகாக இருக்கிறதென்று..' அழகாயிருப்பதில் எல்லாம் ஆபத்தும் இருக்கும். அழகாகவும் ஆபத்தாகவும் இருப்பதுதானே தெய்வம்" என்றான் கூட்டத்தினரை நோக்கி. அவன் ஆம்புலன்சு வண்டியில் நுழைந்தபோது, சுற்றிநின்ற உலகம். அவன் பட்டத்தை உறுதிப்படுத்தப் பைத்தியம், பைத்தியம் என இருமுறை ஒலித்து, 'பைத்தியம் வாழ்க' என வாழ்த்தும் பாடிற்று.

திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழா.

இப்பொழுது நடைபெறுவது திருவள்ளுவரின் ஆண்டு 1995 ஆகும். இன்னும் ஐந்து ஆண்டுகள் கழிந்ததும் இரண்டாயிர ஆண்டு நிறைவுறுகின்றது. இவ்விரண்டாயிர ஆண்டு நிறைவை நாடெங்கும்–உலகெங்கும் தக்கமுறையில் கொண்டாடி வள்ளுவரின் சீர்த்தியை வையகமெங்கும் அறியச்செய்தல் தமிழ்மக்களின் தவிர்க்கலாகாக் கடனாகும். இவ்விழாவை எவ்விதம் கொண்டாடலாம் என்பதற்குரிய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. அறிவிக்க விரும்புவோர் "குறள் நெறி"க்கு எழுதுமாறு வேண்டப்படுகின்றனர்.

'குறள்நெறி'

(திங்கள் இரு முறை வெளிவரும்)

ஆசிரியரும் வெளியிடுவோரும்:

பேராசிரியர் சி. இலக்குவனார்

தனி இதழ் விலை 25காசு

ஆண்டுக் கட்டணம் ரூ 5.

விவரங்கட்கு :

ஆசிரியர் 'குறள்நெறி'

திருநகர், மதுரை-6

தமிழ் நம் உயிருக்கு நேர்.

(1—2—64 இதழின் தொடர்ச்சி)

திருக்குறளில் உருவகம்

— ஆங்கிலப்போராசிரியர் வீ. ஒப்பிலி

இவ்வாறு முட்களும், அடிமரத்தை வெட்டி வீழ்த்தும் கோடரியும் துன்பத்தில் உருவாகின்றன. மரத்தை வெட்டுதலும், வீழ்த்துதலும் அழிவின் சின்னமாகின்றன. இவ்வாறே பிணக்கினால் வாடிய காதலி வாடிய கொடியாகிறாள்; அவளது ஊடலை நீக்காது, கூடாது செல்லும்காதலன் அக்கொடியை அடியிலே அறுக்கும் கொடியவனாகிறான். முள் மரம் இளையதாக இருக்கையிலே அழிக்கப்பட வேண்டும்; ஆனால் பழம் பெரும் அடிமரமும், வாடிய கொடியும் காக்கப்படவேண்டும். பெருங் குடி காப்பவன் முதலில் இல்லாளின் வாட்டத்தை நீக்கிக் காப்பவனாக இருக்கவேண்டுமல்லவா?

கயவரை எண்ணிய திருவள்ளுவர் கரும்பை எண்ணியது வியப்பே! கரும்பின் இனிமையை எளிதில் நுகரமுடியவில்லை; அதை நெருக்கிப் பிழிந்தால்தான், பயன் விளைவிக்கும். இவ்வினிய பொருளின் தன்மை கயவர்க்கு உருவகமாக அமைகிறது. கடிந்து நடத்தினால்தான் அவர்கள் பயன்படுவர். மூங்கில் பெண்ணின் தோளிற்கு உருவகமாகிறது. தினையும் பனையும் சிறிதும் பெரிதுமான பொருள்களுக்கு முறையேஉருவகங்களாகின்றன. புல்லும், தினைபோல, எளிமைக்கும், இழிவிற்கும் அடையாளமாக எடுத்தாளப்படுகின்றன.

பொதுவாகக் கூறுமிடத்து, மரம், கனி, காய் இவை வாழ்க்கையில் தோன்றும் மாறுபட்ட இருமைகளை (The dichotomies of life) எடுத்துக்காட்டும் அடையாள உருவகங்களாகத்திருக் குறளில் தோன்றுகின்றன. இதைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

மலர்: மென்மையைச் சொல்லுமிடத்தெல் லாம் பெரும்பாலும் மலர் உருவகமாகத்தோன்று கிறது. இறையன்பு கொண்டோர் மனம் பூவாக மலர்ந்தது. அதில் ஆண்டவன் வீற்றிருப்பதைக் காண்கிறார் வள்ளுவர். அழகாலும் அமைப்பாலும் மலர்கள், சிறப்பாகத் தாமரையும், குவளையும், பெண்கள் முகத்திற்கும் கண்ணிற்கும் உருவகங்களாகின்றன. "பூவன்ன கண்ணுள்" காதலியாகிறாள்; திருமகள் தாமரையினுள் ஆகிறாள். மலர்களுள் அனிச்சம் மென்மையில் சிறந்தது. இது மோந்தவுடன் வாடும் இயல்புடையது. ஒம்பாத விருந்தினரின் முகம் உடன் வாடுவதைக் குறிக்க இம்மலர் உதவுகிறது. காதலியின் பாதமென்மை இப்பூவின் மென்மையைவிடச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. அவளது மெல்லிய அடிகளுக்கு இப்பூ நெருஞ்சிப் பழமாம்! அனிச்சமலரும், அன்னப்பறவையினிறகும், மயிலினிறகும் மென்மைக்கு உருவகங்களாகத் திருக்குறளில் சொல்லப்படுகின்றன. மேலும், பூமலர்தல் மகிழ்ச்சியின் தோற்றத்திற்கும், கூம்புதல் துன்பத்தின் தொடக்கத்திற்கும் அடையாளமாக உள்ளன. சிறந்த அறிவு முன் மலர்ந்து பின் கூம்பாது என்கிறார் வள்ளுவர்.

மலரே மென்மையானது; அதைவிட மென் மையான கற்பனை மலராக காமம் காட்சியளிக்கிறது. காமநோய் காலையில் துவங்கி, பகல் முழுவதும் வளர்ந்து, மாலையில் முதிருகிறது. இத்தோற்றமும், வளர்ச்சியும், காலை அரும்பிற்கும், பகல்போதிற்கும், மாலை மலருக்கும் ஏற்ப அமைகிறது. மணம் அடங்கிய அரும்போ காதலியின் குறிப் படங்கிய புன்முறுவலாக மாறுகிறது. இவ்வுருவகம் கற்பனை மலர்ச்சியோடு மிக அழகாக அமைந்துள்ளது. இவ்வாறு அழகும், மணமும் மென்மை யும் கூறுமிடத்தெல்லாம் மலர் இடம் பெறும். நீர்ப்பூக்களைக்குறித்தும் ஒரு குறள் உள்ளது. இவை களின் தாள் நீளம் நீரின் அளவினதாகும். இப் பொருள் ஊக்கத்திற்கேற்ற உயர்விற்கு உருவக மாகிறது.

மலரைப்பற்றி குறையாகச் சொல்லப்படும் குறள் ஒன்றுதான் உள்ளது. கொத்தாக மலர்ந்து, மணங்கமழாத மலர், சொல்வன்மையில்லாத கற் றோருக்கு உருவகமாகிறது. இங்குச்சொல்வன்மை பூவின் மணமாகச் சொல்லப்படுகிறது. காதற் குறிப்பும் மொட்டுள் மணமாக முன்னர் சொல்லப் பட்டது.

தாமரை மலர் திருமகளையும், திருமாலையும் நினைவூட்டுகிறது, தாமரைக்கண்ணனை திருமாலின் உலகம், விரும்பும் காதலியோடு பெறும்துயிலுக்கு ஈடாகாது என்கிறான் காதலன். திருமாலுக்கு அடைச் சொற்கள் பற்பல உண்டு. ஆயினும் தாமரைக் கண்ணன் என்ற பொதுவழக்கை இங்கே பயன்படுத்தியது, காதலைஎண்ணியகவிஞர், தாமரை மலரையும் எண்ணிய காரணமேயாகும். தாமரை, மென்மையும், இனிய மணமும், செவ்வண்ணமும், இறைமாட்சியும் உடைய மலராகி, கண்ணனுக்கும் அடைச் சொல்லாகி, காதலின்பத்தை உயர்வாகக் காட்டும் உருவகமாக அமைகிறது.

மழை: வானத்திலிருந்து கொட்டும் மழை, கைம்மாறு வேண்டாது உலகத்திற்கு உதவி செய் யும் கருணையின் வடிவாய் விளங்குகிறது. இவ் வாறே சேக்சுபியரும் மழையை அருள் வடிவாகக் காண்கிறார். "வெனிசு வணிகன்" என்ற நாடகத் தில் இரக்கத்தின் தன்மையைச் சைலக்கிற்கு பின் வருமாறு எடுத்துரைக்கிறாள் போர்சியா: "கருணை என்னும் குணம் (ஒருவரது) வற்புறுத்தலால் தோன்றுவது அன்று; வானத்திலிருந்து மண்ணின் மீது தானே சொரியும் நன் மழை போன்றது அது." தாவரங்களும், விலங்கினமும், மனித இனமும் உல கம் தோன்றிய நாள் முதலாக என்றென்றும் வாழ வழிசெய்யும் மழையை அமிழ்தம் எனக் கூறுகிறார் திருவள்ளுவர். வானோர் பூமியின் மீது அமிழ் தத்தை — விசும்பின் துளியைத் தெளிக்கின்றனர். அதனால் நிலமடந்தை மகிழ்ந்து, உயிரினங்களைத் தோற்றுவித்து வாழச்செய்கிறாள். மழை வானின்று உழவருக்குக் கிட்டும் வரமாய். மழை உண வாகிறது; உணவாக்குகிறது; இவ்வாறு பசி நீக்கு கிறது. வாழ்க்கைக்கு அது வளமளிக்கிறது. என்? நெடுங்கடலையும் தன்னிலைகெடாது வற்றாது காக்கி றது. வழிபாடு, தானம், தவம், ஒழுக்கம், செம் மையான உலகவாழ்க்கை இவையாவிற்கும் அடிப் படையாக மழை விளங்குகிறது. மழை பெய்யா விடில் எளிய பசும் புல்லும் தலையைக்காட்டாது. உலகம் அப்போது பாலையாகிவிடும். ஆதலால் உல கத்து உயிர்களெல்லாம் வானேக்கி மழையெனும் அருளைப்பெற வேண்டுகின்றன.

(வளரும்)

(1—2—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

— பேராசிரியர் சி. இலக்குவனார்

எழுத்துப் படலம்

நான் மரபு : எழுத்துப்படலத்தில் உள்ள ஒன்பது இயல்களில் முதல் இயல் நூன்மரபாகும். நூல் எழுதுவதற்கு வேண்டப்படும் எழுத்துக்களைப் பற்றிக் கூறுவதனால் இவ்வியல் நூன்மரபு எனும் பெயரைப் பெற்றுள்ளது. இதில் கூறப்படுகின்ற இலக்கணம் சொற்களினிடையே நிற்கும் எழுத்திற்கு அன்றித் தனியாக நிற்கும் எழுத்திற்குஆகும் என அறிதல் வேண்டும்.

க. எழுத்து எனப்படுப
அகரம் முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்துவரல் மரபின் மூன்று அலங்கடையே.

இந்நூற்பா தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்று என உரைக்கின்றது. அவற்றுள் முதல் எழுத்து முப்பதும் சார்பு எழுத்து மூன்றும் ஆம். 'முதல் எழுத்து' என நூற்பாவில் இல்லையானாலும், சார் பெழுத்து மூன்றும் சேராதபோது எழுத்துக்கள் முப்பது என்றமையால், அம்முப்பதும் முதல்எனப் பட்டன.

பன்னிரண்டு உயிர்கள். பதினெட்டு மெய்கள். 'அ'முதலாக 'ஔ' இறுதியாகப் பன்னிரண்டு உயிர்களும், 'க' முதலாக 'ன' இறுதியாகப் பதினெட்டு மெய்களும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழில் உள்ளன. அதனால்தான் 'எழுத்து என்று சொல்லப்படுவன' என்னும் பொருளில் 'எழுத்தெனப்படுப' எனக் கூறப்பட்டுள்ளது."

உ. அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற்புள்ளியும் எழுத்துஓர் அன்ன.

மேல் நூற்பாவில் சார்ந்துவரும் எனக் கூறப்பட்டவைகள்தாம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவாகும். இவை மூன்றில் 'ஆய்தம்' ஒன்றுக்குத்தான் வரிவடிவம் (எழுத்து) உண்டு. அவ்வடிவமும் மூன்று புள்ளிகளாக (ஃ) இருக்கும். ஏனை இரண்டுக்கும் வரிவடிவங்கள் இல்லை.

ஆகவே தமிழில் எழுத்துக்கள் முப்பத்து ஒன்றுதான். நம் தமிழில் ஆங்கிலத்தைவிட ஐந்து எழுத்துக்கள் கூடுவதற்குக் காரணம் உயிரில் குறில் நெடில் எனும் பிரிவு இருப்பதனால்தான். ஆங்கிலத்தில் ஒரே எழுத்துக் குறிலாகவும் நெடிலாகவும் இருப்பதனால் ஐந்து எழுத்துக்கள் குறைந்தாலும் ஆங்கிலம் ஒலிப்பு முறையில் குறைபாடு உடையதாகவேயுள்ளது.

தமிழில் எழுத்துக்கள் எத்துணை என்றால் **முப்பத்தொன்று** என்றுதான் கூறுதல்வேண்டும். உயிர் மெய் எழுத்துக்கள் (12x18) 216 ஐயும் சேர்த்து 247 எனக் கூறுதல் தவறுடைத்தாகும்.

வேற்றுமொழிச் சொற்களை ஒலிப்பதற்காக ஷ, ஜ, க்ஷ, ஹ, ஸ போன்ற எழுத்துக்களைத் தமிழில் சேர்த்து எழுதுவதும் மொழிநூல் முறைக்கு மாறுபட்டதாகும். ஆங்கிலத்தில் நம் 'தமிழ்' என்ற சொல்லை 'டமில்' என்றுதான் எழுதியும் ஒலித்தும் வருகின்றார்களேயன்றி. அங்கு இல்லாத 'த', 'ழ' எனும் எழுத்துக்களை இங்கிருந்து கடன் பெறவில்லை என்பதை நோக்குதல் வேண்டும்.

வேற்று மொழி ஒலிகளைத் தமிழ் ஒலிப்புமுறைக்கேற்பத் தமிழ் எழுத்துக்களால்தான் எழுதவேண்டும் என்பது தொல்காப்பியர் ஆணையும் ஆகும். தொல்காப்பியர் கூறுகின்றார் :

"வடசொற் கிளவி வடவெழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"
(தொல் - சொல் 401)

தமிழோடு தொடர்புகொண்ட முதல் அயல் மொழி ஆரியமேயாகும். அது வடநாட்டில் வழங்கியமையான் வடமொழி எனப்பட்டது தொல்காப்பியர் காலத்தில்தான் தெற்கே வழங்கத்தொடங்கியது. அம்மொழிச் சொற்களை எடுத்தாளக் கூடிய கட்டாயம் ஏற்பட்டால் அம் மொழிக்குரிய ஒலிகளை அகற்றிவிட்டுத் தமிழ்ஒலி கூட்டித் தமிழ் எழுத்தால்தான் எழுதவேண்டும் என்பது தொல்காப்பிய விதியாகும், ஏனைய மொழிகளிலும் கையாளும் முறையாகும். ஆகவே வேற்றுமொழி ஒலிகளைத் தமிழில் அப்படியே ஒலிக்க வேண்டுமென்று கருதுவதும், அதற்காக வேற்றுமொழி எழுத்துக்களைக் கடன் பெறவேண்டும் என்பதும், அல்லது, புதிதாக எழுத்துக்களைப் படைத்துக் கொள்ள வேண்டுமென்பதும் சற்றும் பொருந்தாது; மொழி நான்முறைக்கு ஒத்ததும் ஆகாது. ஏனெனில் தமிழில் இல்லாத வேற்று மொழி ஒலிகளை எல்லாம் அம்மொழிகளில் உள்ளவாறே ஒலிக்கவேண்டும் என்று கருதிக் கடன் பெறவோ, புதிதாக உண்டு பண்ணவோ முயல்வோமானால் தமிழ் நெடுங்கணக்கு (எழுத்துமுறை) அளவின்றிப் பல்கிப் பெருகும் என்பதில் ஐயமின்று. ஆதலின் தமிழில் உள்ள முப்பத்தொரு எழுத்துக்களைக் கொண்டேதான் நாம் வேற்று மொழி ஒலிகளையும் எழுதுதல் வேண்டும். இடைக்காலத்தில் ஆரியமொழிச் செல்வாக்குத் தமிழகத்தில் மிகுந்திருந்த காலத்தில், மொழிநூன்முறை யறியாதார் ஷ, ஜ, ஹ, க்ஷ போன்ற எழுத்துக்களைப் படைத்துவிட்டனர். அவற்றை அறவே நாம் இன்று நீக்குதல் வேண்டும். அவைகளைப் பயன்படுத்துவதைத் கண்டுதான் சிலர், தமிழில் இல்லாத ஆங்கில f, z போன்ற எழுத்துக்களையும் தமிழில் சேர்க்கவேண்டுமென்கின்றனர். ஆதலின் வேற்று மொழிகளின் சொற்களைத் தமிழ் ஒலிமுறைபோடு பொருந்தாத விடத்துத் தமிழ் ஒலிப்படுத்தித்தான் பயன்படுத்துதல் வேண்டும் என்பதை உளத்தில் கொள்ளுதல் வேண்டும்.

குலவிவரும் தென்றலினைத் தமிழ்ப்பொழிலைக்
குறள்நெறியை
வாழ்த்தி நிற்போம்!
உலகுபுகழ் கலைத்தந்தை **தியாகராசர்** பேருளின்
உயர்வு போற்றிப்
பலர்போற்றும் பெருமைமிகு பேரறிஞர்
இலக்குவனார்
பான்மை வாழ்த்திப்
புலமைநெறி வளர்க்கின்ற **குறள்நெறியின்**
புகழ்பாடிப்
பொலிந்து வாழ்வோம்.

— கவிஞர் கதி. சுந்தரம்

(தொடர் கதை)

1-2-64 இதழின் தொடர்ச்சி

'பூங்கோதை'

வித்துவான்

மு. இராமகிருட்டினன், எம்.ஏ., பி டி.

'இப்படித் தவறுமல் அசை போட்டுக்கொண்டிருக்கிறாயே. அதுதானே அம்மாள் உன்னை கடிந்து கொள்கிறார்கள்' என்று காளியம்மை சலித்துக்கொண்டிருந்தாள். ஒருவாறாக உணவை முடித்துக்கொண்டு பூங்கோதை தாழ்வாரத்தை அடுத்துள்ள தன் அறையை நோக்கிப் புறப்பட்டாள்.

கூடத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஊசலில் செங்கமலம் தாலீத் தொங்கவிட்டு அமர்ந்திருந்தாள். காளியப்பன் எதிரே கிடந்த இருக்கையில் ஓய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருந்தான். வண்ணக்கிளி தன் அம்மாவின் காலைக் கட்டிக் கொண்டிருந்தாள். இந்த இனிய காட்சிக் கிடையில் அஞ்சி ஓடுங்கி சென்ற பூங்கோதை குறுக்கிட்டது இடையூறாகத் தோன்றியது போலும்.

"பூங்கோதை!" என்று செங்கமலம் கூவினாள்.

"பூங்கோதை! வரவர உன்போக்கு சரியாக இல்லை"

"நான் என்ன தவறு செய்தேன்! காளி ஏதாவது அப்படிக் கூறினாளா?"

"பூங்கோதை! எடுத்ததற்கெல்லாம் என்ன, எதற்கு, ஏன்? என்று வினவுகிற குழந்தைகளையே எனக்குப் பிடிக்காது. பெரியவர்களிடம் உனக்கு நடந்து கொள்ளவே தெரியவில்லை. அடக்கமாகப் பேசத்தெரிந்து கொள்கிற வரை தனியாகவே இரு."

பூங்கோதையின் கண் கலங்கிற்று. ஒரு குற்றமும் செய்யாத போதும் ஒறுத்தலா என்று விம்மினாள். அடுத்த கொடியில் அவள் தனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த தாழ் வார அறைக்குள் போய்விட்டாள். சொருகுபேழையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நூல்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு, சாளரத்தின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டாள். அந்த அறையின் கதவுகள் திறந்திருந்தன வேனும் பசிய பூவை தொங்கல் வாயிலை மறைத்துக் கொண்டிருந்தது. தாழ்வாரத்தை ஒட்டித் தொங்கிக் கொண்டிருந்த பசிய கொடிகளினின்று நீர்த்திவலைகள் சொட்டிக்கொண்டிருந்தன. கொடிகளுக்கிடையே பூங்கோதையின் நோக்குச் சென்றது. நெடுந்தொலைவிற்குப் பசும்புல்வெளி காட்சியளித்தது. அப்புல்வெளிக்குப் பின்னல் எழுந்து நின்ற கரிய மலைத் தொடரைக் கார்முகில் கவ்விக் கொண்டிருந்தது. இத்தகைய தண்ணிய காட்சி பொதுவாக இன்பமூட்டுவதாகத் தானிருக்கும். ஆயினும், அதே காட்சியோடு ஒன்றி நின்ற இருள் பூங்கோதையின் உள்ளத்தில் ஒரு சுமையை உண்டாக்குவதாயிருந்தது. உலகமே இருண்டு கொண்டு வருவது போலிருந்தது

பூங்கோதை இயற்கைக் காட்சியில் ஈடுபட்டிருந்த தன் உள்ளத்தை நூற் பொருளினிடத்து ஒருமிக்க முயன்றாள். அந்நூல் அவளுடைய தந்தையார் செந்திலப்பரால் எழுதப்பட்டது. தந்தையார் எழுதியது என்பதனால் மட்டும் அவள் அதை விரும்பவில்லை. அதில் சிறந்த தலைவனுக்குக் காட்சியளிக்கும் கும்பகர்ணனின் அன்புடைமையும், ஒருபாற் கோடாத நேரிய பண்பும், அசையாத உள்ளமும் ஆண்மையும், அவனுடைய உள்ளத்தில் புதுமையோடு கூடிய ஆர்வத்தை எழுப்பின. அந்நூல் எளிய முறையில் சிறுவர்களுக்காக எழுதப்பட்டிருந்ததேயாது. கும்பகர்ணன் தன் அண்ணன் இராவணன் முன்பு கண்ணீர் வடித்து நின்று விடைபெறும் காட்சி ஓவியமாக முன் அட்டையில் தீட்டப்பட்டிருந்தது "அரக்கர் என்று இகழப்படும் இனத்திலும் இத்தகைய சிறப்பு மிக்கவர் தோன்றியுள்ளனரே! உயர்ந்த பண்பாடுடைய மேற்குடியில் பிறந்தவர் என்று மார் தட்டிக்கொள்ளும் சிலரிடத்தில் எத்துணை இழி பண்புகள் உள்ளன" என்று ஏங்கினாள். தன் அண்ணனை விடுத்து மாற்றானிடம் மண்டியிட்டவன் அவன் தம்பிதானே" என்று நினைத்தாள் பூங்கோதை யென்ன கம்பராமாயணத்தையே கரைத்துக் குடித்த புலமை பெற்றவளா? இளமை உள்ளத்தில் நேரிய எண்ணங்கள் தோன்றுதல்தானே இயல்பு. "மாற்றான் மனைவியைக் கவர்ந்தவன் என்பதற்காக அண்ணனை வெறுத்துப் பகைவனிடம் சேர்ந்தானே அவ்வீரியான்?" என்ற வினா அவளைத் தேற்றியது. "எனினும் அவனும் கும்பகர்ணனைப்போல் அண்ணனுக்கு முன் உயிர் துறந்திருக்கவேண்டும்; அதுவே சிறந்தது. அவன் உற்றார் உறவினர் என்ற பாசம் இல்லாதவன் போலும்! என் அத்தை செங்கமலத்திற்குத்தான் என்ன பாசமிருக்கிறது? ஆம், அவளுக்கும் எனக்கும் என்ன? என் மாமாவைக் கட்டிக் கொண்டவள்; அவ்வளவுதானே? அவள் போகட்டும்; என் மாமாவின் மக்கள் என்னோடு குருதித் தொடர்புடையவர்களாயிற்றே; அவர்களாவது என்னிடம் பரிவு காட்டக்கூடாதா" என்ற எண்ண அலைகள் அவளைப் படிக்க விடாமல் மயக்கத்தில் ஆழ்த்தின. அம்மயக்க உணர்வில் அவளுடைய இன்ப அலைகள் ஒடுங்கிக் கிடந்தன. இந்த அமைதியும் எத்துணை நேரம்?

கூடத்தின் கதவுகள் திடீரென உதைத்துத் தள்ளப்பட்டன. அடுத்த கொடியில் காளியப்பன் பூங்கோதை இருந்த அறையின் வாயிலண்டையில் நின்று உள்ளே நோக்கினான். அவள் சாளரத்தருகே ஒட்டிக் கொண்டிருந்ததால், அவளை அவன் காணக்கூடவில்லை.

'எங்கே அந்த மடக்கழுதையைக் காணவில்லை? வண்ணக்கிளி! 'இந்த மழையில் எங்கோ ஓடிவிட்டாள். அம்மாளிடம் சொல்லு' என்று காளியப்பன் கத்தினான்.

பூங்கோதை திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள்.

ஒருக்கணித்து வைத்திருந்த கதவிற்கிடையில் உற்று நோக்கிய வண்ணக்கிளி, 'அண்ணா! அவள் சாளரத்தண்டை ஒளிந்து கொண்டிருக்கிறாள்'. என்று அண்ணனிடம் தெரிவித்தாள்.

காளியப்பன் உள்ளே நுழைந்து அவளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்திருப்பான். அதைத் தவிர்க்க எண்ணிய பூங்கோதை வேண்டா வெறுப்போடு வெளியே வந்து, 'ஏன்?' என்ன வேண்டும்?' என்று வினவினாள்.

'என்ன வேண்டும்? என்று என்னையே மருட்டுகிறாயா? கூப்பிட்டால் நாய்போல ஓடிவரவேண்டும்' என்று கூறிக்கொண்டே நடப்பை அடுத்திருந்த வரவேற்பறையில் கிடந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்த காளியப்பன், அவளைத் தன் முன் வந்து நிற்குமாறு ஆணையிட்டான்.

காளியப்பன் பூங்கோதைக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு மூத்தவன். அவன் தன் வயதுக்கு மீறிய பருமனும் உயரமும் உடையவனாக இருந்தான். அவனுடைய தந்தையார் இறந்த மறு ஆண்டிலிருந்தே அவன் குயிற்பொதும்பருக்குப் பத்துக்கல் தொலைவிலிருந்த நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியிலிருந்த விடுதியில் சேர்ந்து படித்துவந்தான். கூதிர்கால விடுமுறையின்போது வீட்டிற்கு வந்திருந்தவன் உடல்நலமில்லை என்று பள்ளிக்குத் திரும்பவில்லை. அவனுடைய பள்ளியின் மாணவர் விடுதிக் காப்பாளர் கரியபெருமாள் 'வீட்டிலிருந்து பலகாரங்கள் அனுப்புவதை நிறுத்திவிட்டால் அவனுடைய உடம்பு சரிப்பட்டு விடும்' என்று பன்முறை செங்கமலத்தம்மையாரிடம் கூறியுள்ளார். பள்ளி மருத்துவர் கருத்துப்படி 'மீதூண்' தான் அவனுடைய நோய். ஆனால் செங்கமலத்தம்மையார், 'யாருடைய கொள்ளிக் கண்ணோ பட்டு நாளுக்கு நாள் தன் அருமருந்தன்ன ஆண்பிள்ளை மெலிந்து வருவதாக வருந்தினாள். ஏதோ சில நாட்களுக்கு வைத்திருந்து உடம்பைத் தேற்றி அனுப்பவே, அவனை வீட்டில் வைத்திருந்தாள்.

(தொடரும்)

பதிவு எண் : M. 7810 திங்களிருமுறை குறள் நெறி

தமிழைக் காக்க வேண்டுகோள்

தமிழ்க்காப்புக் கழகம்.
கி.17, திருநகர், மதுரை-6.

தமிழ்ப்பெருமக்களே! "தமிழ் நாட்டில் தமிழ்த்தெருவில் தமிழ் தான் இல்லை" என்ற குறையைப் போக்குதல் வேண்டும். ஒரு மொழியின் வாழ்வு அதைப்பயன் படுத்துதலில்தான் பிணைந்துள் ளது. மக்களால் அவர்தம் அன் றாட வாழ்வில் பயன்படுத்தப் படாத மொழி வழக்கிறந்தமொழி யாகிவிடும். தமிழர் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் தமிழ் இடம் பெற்றாலன்றித் தமிழ் என் றும் உளதாக இராது. ஆதலால் உங்கள் வாழ்வின் எல்லாத்துறை களிலும் தமிழுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுகின்றோம்.

வேற்று மொழிச் சொற்களைத் தமிழ் எழுத்தில் எழுதும் பழக் கத்தைக் கைவிடுதல் வேண்டும். "இன்ஸ்டிடியூஷன்" "லாட்சு" "போர்டிங்" "ரூம்" "கிளப்" "ஷாப்" "மெடிகல்" "வாஷிங்" "சலூன்" என்றெல்லாம் எழுது தலை நீக்குங்கள். நிலையம், தங்கு மிடம், உண்ணும்மனை, உண்டி விடுதி, உறையும்மனை, அறை, கழகம், மருந்துக்கடை, வெளுக் கும் நிலையம், ஒப்பனை நிலையம் என்றெல்லாம் பெயரிட்டால் என்ன? இனிமையும், தூய்மை யும், எளிமையும் பொருந்த தமி ழில் அழகிய பெயர்கள் இடலாம் அன்றோ? தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்து செந் தமிழைக் காக்க வேண்டுகின் றோம். இவ்வகையில் உங்கட்கு எல்லா வுதவியும் செய்யக் காத் துள்ளோம். நல்ல தமிழ்ப் பெயர் வேண்டுமானால் உங்கள்கருத்தை அறிவித்து எழுதினால் உடனே அறிவிக்கக் காத்துள்ளோம். பிள்ளைகட்கும், வீடுகட்கும், வாணிப நிலையங்கட்கும், தெருக் களுச்சும் பெயர்கள் இடும்போது எங்களுடைய ஆய்வுரையையும் கேளுங்கள். கட்டணம் பெறுமல் உதவக்காத்துளோம்.

நல்ல தமிழை நாட்டில் நிலைக் கச்செய்து தமிழின் இனிமையை யும் தூய்மையையும் காப்பதற் காகவே **தமிழ்க்காப்புக்கழகம்** தோன்றியுள்ளது. தமிழைக்காக் கும் தொண்டில் ஈடுபடவிரும்பும் அனைவரும் தமிழ்க்காப்புக்கழகத் தில் உறுப்பினராகச் சேரலாம். ஆண்டுக்கட்டணம் பத்து வெண் பொற்காசுகள். இவர்கள் தமிழ்க் காப்பாளர் எனும் சிறப்புக்கு உரியவர் ஆவார்கள். இவர்கட்குக் "குறள் நெறி" கட்டணம் இன்றி அனுப்பப்பெறும்.

உறுப்பினராக விரும்புவோர் பின்வரும் உறுதிமொழி கூறுதல் வேண்டும்.

"திருக்குறளைப் போற்றித் தொல் காப்பிய வழி நின்று செந்தமிழைக் காக்க உடலாலும், உள்ளத்தாலும், உரையாலும் தொண்டு செய்வேன் என எங்கும் உளை இறைவன் சான் றாக உறுதிமொழி கூறுகின்றேன்.

உறுப்பினராக விரும்புவோர் எழுதுமாறு வேண்டப்படுகின் றனர்.

இதுநாள் வரையில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள்

1) கண. சோமசுந்தரம்,
இராம. அ. அ. சி. வ. இல்லம்,
பாகனேரி (அஞ்சல்)
இராமநாதபுரம் மாவட்டம்.

2) வீ. முத்துச்சாமி,
தென்கரை,
வடகரை (அஞ்சல்),
இராசபாளையம் (வழி)

3) ஆ. கணபதி,
சமீன் ஆலமரத்துப்பட்டி
(அஞ்சல்)
பள்ளபட்டி (வழி)
கரூர் வட்டம்.

4) கு. வரதராசன்,
அய்யனூர்புரம்,
சமுசிகாபுரம் (அஞ்சல்)
இராசபாளையம் (வழி)

5) இல. க. இரத்தினவேல்,
கொத்தங்குளம்,
வைத்திலிங்கபுரம் (அஞ்சல்)
திருவில்லிபுத்தூர் (வழி)

6) பெ. அரங்காச்சாரி,
11, சௌராட்டிரபெரிய
தெரு, திருவப்பூர்.
இராசகோபாலபுரம்
(அஞ்சல்)
புதுக்கோட்டை.

7) நா. காமராசன்,
போடி மீனாட்சிபுரம்,
மதுரை மாவட்டம்.

8) தங்க. ஆ. பழனிச்சாமி,
தங்கச்சியம்மாபட்டி
(அஞ்சல்)
பழனி வட்டம்.

9) திரை. சிவசுப்பிரமணியன்,
பேரையூர்,
மதுரை மாவட்டம்.

10) ச. நவநீதகிருட்டினன்,
கலிங்கல்மேட்டுப்பட்டி,
நென்மேனி (அஞ்சல்)
சாத்தூர் (வழி)

11) மு. முகையதீன்
அப்துல்காதர்,
காந்தி வீதி,
களக்காடு (அஞ்சல்)
நெல்லை (மாவட்டம்)

12) மு சௌந்தரபாண்டியன்,
தேவர் குளம்,
சிவகாசி (அஞ்சல்)
சாத்தூர் வட்டம்,

13) வீ. கிருட்டிணசாமி,
தே சொக்கலிங்கபுரம்,
தம்பிநாயக்கன்பட்டி
(அஞ்சல்)
மதுரை மாவட்டம்.

14) பீ. மு. அபிபுல்லா,
வணிகம்,
மூன்று விளக்கு வீதி,
போடி, மதுரை மாவட்டம்.

15) கு. இராசாராம்,
மே. மீனாட்சிபுரம்,
சிவரக்கோட்டை (அஞ்சல்)
திருமங்கலம் (வட்டம்)

16) மா. சின்னச்சாமி,
பூலானந்தபுரம்,
கேயம்பட்டி (அஞ்சல்)
பெரியகுளம் வட்டம்,
மதுரைமாவட்டம்.

17) ப. ஆ. இராசரத்தினம்,
கீழவளவு (அஞ்சல்)
மேலூர் வட்டம்,
மதுரைமாவட்டம்.

18) ச. இரவீந்தரநாத்,
பென்சனர் தெரு,
திண்டுக்கல்.

19) சி. பா. முகைதீன்
125/10 ஓபுளாபுரம்,
ஆயக்குடி (அஞ்சல்)
பழனி வட்டம்.

20) சு. மணிமாறன்,
பெருமாள்பட்டி.,
லிங்கவாடி (அஞ்சல்)
மதுரை மாவட்டம்.

(தொடரும்)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர் கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.